செந்தமிழ்

தொகுதி 79 டிசம்பர் '85 பகுதி 4

இந்த இதழில்

- — நூல் மதிப்புரை
- — கடல் கடந்த கண்ணன்
- — இலக்கிய நோபல் பரிசு பெற்ற கிளாட்சைமன்
- — ஆசிய ஜோதியும் ங்கில மூலமும்

காலாண்டு இலக்கிய இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

ஆசிரியர் : என் எஸ், முத்துமலைச்சாமி
பி.ஏ. பி.எல்.,

செந்தமிழ்

தொகுதி 79 டிசம்பர் 1985 பகுதி-4

உள்ளுரை

என்	பொருள்	பக்கம்
1.	இலக்கிய வினா விடை	6
2.	தாஜ் மஹாலுக்கு வயதாகிவிட்டது	9
3.	ஆசிய ஜோதியும் ஆங்கில மூலமும் — பழனி. அரங்கசாமி	10
4.	நூலகத்துக்கு அன்பளிப்பு	18
5.	நூல் மதிப்புரை	19
6.	இலக்கிய நோபல் பரிசு பெற்ற கிளாட்சைமன் — எஸ். கண்ணப்பன்	20
7.	நூல் மதிப்புரை	23
8.	கடல் கடந்த கண்ணன் — பி.ஆர். ஸ்வாமி	26
9.	நூல் மதிப்புரை	33
10.	தவத்தை விட்டு வெளியே வா — ப. முத்துசுவாமி	35
11.	நூல் மதிப்புரை	36
12.	சிலம்பில் மகளிர் வருணனைகளில் உவமைகள் — ஈ. அன்னக்கிளி எம்.ஏ.எம்பில்	38
13.	சங்கச் செய்திகள்	44

பொறுப்பாசிரியர்: பழனி. அரங்கசாமி

ஆசிரியர் பக்கம்

சென்ற இதழில் இடம் பெறாத சில மதிப்புரைகள் இவ்விதழில் வெளி வருகின்றன. விட்டுப் போன நூல்களின் மதிப்புரைகள் தொடர்ந்து வெளி வரும். இவ்வாண்டு இலக்கிய நோபெல் பரிசு பெற்ற மேலை நாட்டு எழுத்தாளர் பற்றிய சிறு கட்டுரை இவ்விதழை அணி செய்கிறது. கடல் கடந்த கண்ணன் பற்றிய வரலாற்றுக் கட்டுரை தொடர்ந்து வெளி வருகிறது. தாகூரின் ஆங்கிலக் கவிதை ஒன்று அழகுற மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்திய மண்ணில் பிறந்த புத்தனது வரலாற்றை இங்கிலாந்து அறிஞன் காவியமாக்கினான். அதனை மிகச் சுருங்கிய அளவில் ஆசிய ஜோதியாக ஒளிவிடச் செய்தார் கவிமணி. மூல நூலையும் தமிழ்த் தழுவலையும் பற்றி வானொலியில் ஒலி பரப்பிய பேச்சு கட்டுரையாக இந்த இதழில் வெளி வருகிறது. சிலம்பு பற்றிய சிறிய ஆய்வுக் கட்டுரையும் சங்கச் செய்திகளும் வாசகரின் பார்வைக்கு வருகின்றன. இதழ் பற்றிய கருத்துரையை எதிர் நோக்கி வணங்குகிறோம்.

— ஆசிரியர்.

அறிவிப்பு

தமிழ்ச்சங்கச் செயலாளரும், செந்தமிழ், ஆசிரியரும் வழக்கறிஞரும் ஆகிய உயர்திரு என். எஸ். முத்துமலைச்சாமி அவர்கள் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் ஆளுநர் குழுவின் (Syndicate) உறுப்பினராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேரவை (Senate) உறுப்பினர்களால் 1986 சனவரித் திங்கள் 3 - ஆம் நாள் தேர்தல் நடத்தப்பட இருந்தது. பேரவை உறுப்பினர்களுள் வேறு எவரும் போட்டி இடாது ஒரு மனதான தேர்வுக்கு வழி வகுத்தமை குறித்து தொடர்புடைய அனைவருக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— பொறுப்பாசிரியர்

லேசர் ஒளிக்கற்றைகள

— ச. முரளிதரன்

திருமலை நாயக்கர் கல்லூரி – மதுரை

தாவரம், நிலக்கரி, பெட்ரோல் மின்சக்தி போன்ற எரி பொருள் சாதனங்கள் காலப்போக்கில் அருகிக் கொண்டே வருகின்றன. எனவே அணுவைக் கூறிட்டு அதனது சக்தியினையும் பயன்படுத்திக் கொள்ளும் ஆய்வில் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் முனைந்து வெற்றி கண்டு வருகின்றன. இந்நிலையில் ‘லேசர்’ எனப்படும் ஒளிக்கற்றையின் ஆற்றலைப் பயன்படுத்துகின்ற புதிய கண்டுபிடிப்பு பற்றிய சிற்சில அடிப்படைச் செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது. அமெரிக்காவில் லேசர் ஒளிக் கற்றையின் மூலம் உடலின் மிக நுண்ணிய பாகங்களிலும் கூட அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள் என்பது அண்மைக் காலத்திய செய்திகளாகும் — ஆசிரியர்.

(கட்டுரை அடுத்த பக்கத்தில்)

முன்னுரை :

இன்று உலகை அச்சுறுத்திக்கொண்டு கேள்விக் குறியாகவே தொடர்ந்து இருக்கும் பிரச்சினைகளில் எரிபொருள் பிரச்சினையும் ஒன்று. இன்னும் தொண்ணூறு வருடங்களில் பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைக்கேற்ப எரிபொருள்கள் செலவழிக்கப்பட்டால் எல்லா எரிபொருள்களும் தீர்ந்துவிடும் அபாயத்தை ஐ.நா அமைப்பின் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது. மனித குலம் மாற்று இயக்கு சக்திகளை உருவாக்குவதில் முனைந்து நிற்கிறது. சமீபத்தில் ஜப்பானில் நடந்த லேசர் சோதனைகளை ஆதாரமாகக் கொண்டு லேசரை எவ்வாறு ஓர் ஆற்றல்மூலமாக்குவது என இக்கட்டுரையில் விரிவாக ஆராய்வோம்.

லேசர் - ஓர் அறிமுகம் :

LASER என்ற சொல்லுக்குரிய விளக்கம் Light Amplification by Stimulated Emission of Radiation என்பதாகும். இதனை தமிழாக்கம் செய்தால் "கதிரியக்கத்தின் தூண்டப்பட்ட உமிழ்வால் ஏற்படும் ஒளி அதிர்வுப் பெருக்கம்" என்பதே இதன் பொருள். இதனைப் பற்றிய முதற்கருத்துகளை வெளியிட்டவர் ஐன்ஸ்டின் ஆவர். இருப்பினும், தெளிவான ஆராய்ச்சியை மேற்கொண்டு வெற்றிகண்டவர்கள் C. H. டவுன்ஸ், நிகலாய், பஸோவ், புரோக்கராவ் என்ற ருஷ்ய விஞ்ஞானிகள் ஆவர். 1954-ஆம் ஆண்டுக்கான நோபெல் பரிசினை இவர்களே பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் லேசரின் பல்வேறு இயல்புகளை ஆராய்ந்து ஒரு அறிக்கையினையும் வெளியிட்டனர்.

1. லேசர் ஒளியின் அலை மிக நீளமானது

2. லேசர் கற்றைகள் குவிவதில்லை.அவை ஒரியல்புடையன.

3. லேசர் கற்றை ஒளிச்சிதறல் அடையாது.

4. லேசர் கற்றைகள் பாயுமிடத்தில் பெருமளவு வெப்பம் ஏற்படுகிறது.

லேசரின் குறிப்பிடத்தக்க இப்பண்புகளே நமக்கு அதனை ஆற்றல் மூலமாக்கத் துணைபுரிகின்றன. இனி லேசர் கற்றையை உருவாக்கும் விதத்தைக் காண்போம்.

லேசர் கற்றை உருவாகும் விதம்:

ஒரு அணுவானது (Atom) நேர் மின்னூட்டமுள்ள உட்கருவையும், அதனைச் சுற்றி K, L, M, N, O, என்ற பெயர்களைக் கொண்ட எதிர் மின்னூட்டமுள்ள எலெக்ட்ரான்களையும் சுற்றும் சுற்றுப்பாதைகள் உள்ளன. இவைகளை ஆற்றல் நிலைகள் அல்லது மட்டங்கள் (Energy levels) என்பர். குறிப்பிட்ட ஓர் ஆற்றல் நிலையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட எலெக்ட்ரான்களை இயங்கமுடியும். உட்கருவைச் சுற்றியுள்ள ஆற்றல் நிலையில் சுற்றும் எலெக்ட்ரான்கள் மின்னூட்ட அளவு குறைந்தவை. இப்பொழுது உட்கருவை நெருங்கியுள்ள எலெக்ட்ரானின் மின்னூட்டத்தை அதிகரிக்கச் செய்தோம் என்றால், அது தன்னை அடுத்த நிலைக்கு மாற்றிக் கொண்டு அதனிலிருந்து சுழலுகிறது. உடனே அந்த நிலையில் உள்ள மற்றொரு எலெக்ட்ரான் தன் சக்தியைக் குறைத்துக்கொண்டு முன்னர் குறிப்பிட்ட ஆற்றல் நிலைக்கு செல்கிறது. அவ்வாறு செல்லும் பொழுது தன் மின்னூட்ட ஆற்றலை மின்காந்த அலைகளாக (Electro Magnetic Wave) உமிழ்ந்து (Emission) விடுகிறது. இவ்வாறு உமிழ் ஆற்றல் பொட்டலங்களாக (Energy Packets) வெளி வருகிறது. இந்த ஆற்றல் பொட்டலங்கள் போட்டான்கள் எனப்படுகின்றன.

இவ்வாறு போட்டான்களை உமிழ்ந்த அணு கிளர்வுற்ற நிலை (Excited State) யில் உள்ளது இந்நிலையில் அணுவின் ஊடே குறிப்பிட்ட அதிர்வெண்ணுள்ள போட்டானைச் செலுத்தினால் எலெக்ட்ரான்கள் தரும் ஆற்றல் நடுநிலைமைக்குத் திரும்பி, இன்னொரு போட்டானை வெளியிடும். இது தூண்டப்பட்ட உமிழ்வு ((Stimulated emission) எனப்படுகிறது. இவ்வாறு பெருமளவில் ஏற்படும் பொழுது, ஒரு பெருக்கம் (Amplification) ஏற்படுகிறது. வெளிவிடப்படும் போட்டான்கள் ஒளியின் அலைநீளத்தை கொண்டிருந்தால் அதுவே லேசர் ஒளிக்கற்றை எனப்படும்.

நம் கைப்பிடி அளவு கொண்ட இயந்திரத்தின் மூலமே இத்தனை பெரிய மாற்றங்களும் நிகழ்கின்றன. அடுத்து லேசர் ஒளிக்கற்றையை எவ்வாறு ஆற்றல் மூலமாக்குவது என்பதனைக்-காண்போம். இதில் லேசர் ஒளிக்கற்றையின் ஆற்றலை 100கிலோ-வாட்டில் இருந்து 1000 கிலோவாட்டுக்களாக உயர்த்தலாம்.

லேசர் இயந்திரத்தின் தத்துவம்

மின்காந்த ஆற்றலை வெப்பஆற்றலாகக் கொண்டு அதன் மூலம் இயக்க ஆற்றலாக மாற்றலாம். குறிப்பிட்ட அதிர்வுள்ள கதிரியக்கத்தை குறிப்பிட்ட வாயுக்கள் உறிஞ்சுகின்றன. அதனால் அந்த வாயுக்கள் சூடேறி, அதன் கன அளவில் பெருக்கம் ஏறபடுகிறது. இந்த திடீர் பெருக்கம் பிஸ்டனை மேலும் கீழும் இயக்கச் செய்கிறது.

இயக்கச்சுழல்

இயக்கச் சுழலை மூன்று வீச்சுகளாகப் (strokes) பிரிக்கலாம். அவை உறிஞ்சு வீச்சு, ஆற்றல் வீச்சு, வெளியேற்றும் வீச்சு என்பன வாகும். உறிஞ்சு விச்சில் குறிப்பிட்ட வாயுக்கலவை உருளைக்குள் (cylinder) செலுத்தப்படுகிறது. இந்த உருளை வைரங்களையோ அன்றி கார்போரண்ட்ம் எனப்படும் செயற்கை வைரங்களையோ ஜன்னல்களாகக் கொண்டதாகும். இதனால் லேசர் ஒளிக்கற்றை குவிவது தடுக்கப்படுகிறது. இப்பொழுது மிக மெல்லிய லேசர் கற்றை வாயுக்கலவையின் ஊடே பாய்ச்சப்படுகிறது. இதனால் மில்லியனில் ஒரு பங்கு நொடிக்குள் வாயுக்கலவையின் வெப்பம் 6000° அளவுக்கு உயர்கிறது. இந்த பெருமளவு வெப்பப் பெருக்கத்தினால் வாயுவின் கன அளவில் மீப்பெரும் பெருக்கம் ஏற்பட்டு பிஸ்டனை வெகுவேக-மாகத் தள்ளுகிறது. இதுவே ஆற்றல் விச்சாகும். இவ்வாறு ஆற்றல் உறிஞ்சப்படுவதால் வாயுவின் வெப்பமும் குறைகிறது. மறுபடியும் பிஸ்டன் மேலே உயர்த்தப் படுகிறது. இவ்வாறு இயக்கச்சுழல் ஏற்படுத்தப்பட்டு ஆற்றல் பெறப்படுகிறது.

வாயுக்கலவை

வாயுக்கலவையை குறிப்பிடும் பொழுது, சில குணங்கள் வரையறுக்கப்பட்ட வாயுக்கலவை லேசர் இயந்திரத்தின் இன்றிய மையாத் தேவையாகும்.

1. இக்கலவை வெப்ப ஆற்றலை உறிஞ்சும் பொழுது வெப்ப ஆற்றல் சிறிது கூட உபரியாக்கக்கூடாது. உபரி ஆற்றலாக மாறினால் லேசர் இயந்திரம், இலட்சிய இயந்திரமாகாது.

2. இக்கலவையை மட்டுமே தனியாக சூடேற்ற வேண்டும். மாறாக, உருளையை சூடேற்றக் கூடாது.

இப்பண்புகள் கொண்ட ஒரே வாயுக்கலவை ஹீலியம்-கார்பன்-மோனாக்ஸைடு கலவையாகும்.

லேசர் இயந்திரத்தின் எதிர்காலம்

1. எரிபொருள் ஏதும் செலவிடப்படுவதில்லை.

2. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதில்லை.

3. மிகக்குறைந்த செலவில் மிகப் பெரும் ஆற்றல் பெறப்படுகிறது.

4. லேசர் இயந்திரத்தின் எதிர்காலம் அறிவியலாரின் கையில் உள்ளது. பிற்காலத்தில் லேசர் இயந்திரம் அறிவியல் உலகத்தின் ஒரு இலட்சிய இயந்திரம் (Ideal Engine) ஆகலாம்.

முடிவுரை

இவ்வாறு பல்வேறு வகையில் சிறந்த இவ்வியந்திரத்தின் கண்டுபிடிப்பாளர் அரபுநாடுகளின் சதியால் பரிதாபமாக மாண்டார். ஆனாலும் அவர் கண்டுபிடிப்பு மீண்டும் ஜப்பானின் மத்திய தரக் கூட்டு நிறுவனத்தின் கவனிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இலக்கிய வினா விடை

(i) ரத்னாகரம் என்பது என்ன?

பரத நாட்டியத்துக்குத் தொடர்பான இந்திய நாட்டு இசையினைப் பற்றிய இந்த நூலைச் சுட்டிக்காட்டி இசைக்கலையின் தொன்மையும் மேன்மையும் புகழ்ந்து பேசப்படுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த-வராகக் கருதப்படும் சாரங்கதேவர் இந்நூலை வடமொழியில் எழுதியுள்ளார். தமது காலத்தில் நிலவிய இசைக்கலை முற்காலத்திய இசையோடு எந்த அளவு தொடர்புடையது என்றும், எத்தகைய புதிய உத்திகளும் நுணுக்கங்களும் அதில் காலங்காலமாக வளர்ந்து வந்துள்ளன என்றும் கூறு-கிறார். நடைமுறை உலகத்திற்கு ஏற்றவாறு அப்போது புழக்கத்திலிருந்த ராகங்கள் தொகுத்தும் வகுத்தும் இந்-நூலில் விளக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வடமொழிவாண-ரின் கருத்துப்படி கி.மு மூன்றாம் நூற்றாண்டினதாகக் கரு-தப்படும் பரத முனிவரின் நட சாத்திரமே இசை, நடனம் பற்றிய ஆதிநூல் என்று கருதப்படுகிறது.

(ii) ஏனைய எந்தப் புராணத்திற்குமில்லாத ஒரு சிறப்புச் செய்தி காஞ்சிப் புராணத்திற்கு உண்டு. அது யாது?

கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகரின் வரலாற்றையும், ஆன்மிகத்தொடர்பினையும் புராணமாக எடுத்-தியம்புவதே காஞ்சிப் புராணம் ஆகும். இது இரண்டு காண்டங்கள் உடையது. இது நாலாயிரத்து எண்-ணூற்று ஐம்பத்தொரு செய்யுட்களைக் கொண்டது. நூலின் முதற்காண்டத்தைத் திருவாவடுதுறையைச் சார்ந்த மாதவச் சிவஞான முனிவர் எழுதியுள்ளார். இரண்டாம் காண்டத்தை சிவஞான முனிவரின் மாணவராகிய கச்சியப்ப முனிவர் யாத்துள்ளார். ஆசிரியராலும் அவரது மாணவராலும் எழுதப்பட்டமையே காஞ்சிப் புராணத்தைப்பற்றிய சிறப்புச் செய்தியாகும்.

(iii) 'பன்னிருகைவேல் வாங்கப் பதினொருவர் படைதாங்கப் பத்துத் திக்கும்
நன்னவவீரரும் புகழ மலைகளெட்டும்' என்று குற்றாலக் குறவஞ்சியில் குறிப்பிடப்படும் 'நவவீரர்' யாவர்?

இச் சொற்றொடர் ஒரு புராணக் கதையினை உள்ளடக்கியது. உமாதேவியின் காற்சிலம்பினின்றும் தெறித்த மணிகள் தரையில் விழுந்ததும் பெண்ணுருப் பெற்றன. விருப்பினால் சிவனை நோக்கிக் கருவுற்ற அப்பெண்கள் நவவீரர்களை ஈன்றனர். இவர்கள் முருகனுக்குத் துணையாக இருப்போராவர். வீரவாகு, கேசரி, மகேந்திரன், மகேசன், புரந்தரன், ராக்கதன், மார்த்தாண்டன், கந்தகன், தீரன் என்னும் ஒன்பதின்மரையே குறவஞ்சி 'நவவீரர்' என்று குறிப்பிடுகிறது.

(iv) 'தேன்நிலவு' எனும் சொற்றொடரின் மரபு என்ன?

ஆங்கில மொழியின் தாக்கத்தினால் தமிழில் உருவாகிய எண்ணற்ற சொற்களுள் இதுவும் ஒன்று. புதுமணமக்கள் திருமணம் நடந்த பிறகு தாம் விரும்பிய வெளியிடத்துக்குச் சென்று இன்பமாகப் பொழுது போக்குதலைக் குறிப்பதுவே இச்சொல். தமிழில் இதற்கு இலக்கியவழக்கோ, மரபோ கிடையாது. 'முதலைக்கண்ணீர்' எனும் பிறிதோர் தமிழ்ச் சொல்லும் இவ்வகையினைச் சார்ந்ததே.

(v) பிரபந்தங்கள் தொண்ணூற்று ஆறு என்று கூறப்படுகிறது. இவையனைத்துக்கும் தமிழில் நூல்கள் உள்ளனவா?

சிற்சில பாட்டியல் நூல்கள் இப்பிரபந்த வகைகளைப் பற்றிப் பேசுகின்றன. தமிழில் பாவினங்கள் நான்கே. மருட்பாவினையும் சேர்த்தால் ஐந்து. இந்தப் பாவினைங்களைப் பல்வேறு வகையானும் தொகுத்து எழுதுவதே பிரபந்தமாகும். சான்றாக மும்மணிக்கோவை என்பது ஆசிரியப்பாவும், வெண்பாவும், கலித்துறையும் கலந்து பாடப்பெறுவது. பத்து வெண்பாவும், பத்து அகவலும் அந்தாதித் தொடையால் இணைந்து வருவது இருபா இருபது எனப்படும்.

பாவினத்தாலன்றி, பாடற்கருத்தை அடிப்படையாகக் கொண்டனவும் பிரபந்த வகையுள் அடங்கும். பரணி தூது, குறவஞ்சி, பள்ளு போன்றவற்றை இதற்குச் சான்று. ஆயினும் பிரபந்தங்கள் அனைத்துக்கும் சான்றுகள் தமிழில் நூல்கள் இல்லை. வைணவரின் கருத்துப்படி ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் அனைத்தும் பிரபந்தங்களே. இங்கு பிரபந்தம் எனும் சொல் இறைவணக்கப்பாடல் எனும் பொருளைத் தருவதாகும்.

தமிழ் எழுத்துக்கள்

தமிழ் மொழியைப்பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். எந்த மொழியும் எப்போதும் வளர்ந்து கொண்டு இருக்க வேண்டும். பல திசைகளிலிருந்து மொழிக்குப் புத்துணர்வு வரவேண்டும். வளராத மொழி செழிக்காது. உலகத்தின் முதன் மொழி என்று கூறப்படும் ஆங்கிலம் இதற்குச்சிறந்த ஒரு சான்று,'

தமிழ்ப்புலவர்களுஞ் அறிஞர்களும் கலந்து ஆலோசித்து சில முடிவுகளை எடுக்க வேண்டும். தமிழ்மொழியின் குறைபாடு என்று நான் நினைக்கும் சில உதாரணங்களைத் தருகிறேன். பன்னீர் செல்வம், பாலசுப்பிரமணியம், பஸ்லுத்தின் - ஆகிய சொற்களில் Pa, Ba, Fa, எல்லாவற்றிற்கும் தமிழ் எழுத்து என்னவோ "ப" ஒன்றுதான் உள்ளது.

இன்னும் ஒன்று. கந்தசாமி கங்காதரன், ஹர்ஷவர்த்தனா Ka, Ga, Ha எல்லாவற்றிற்கும் தமிழ் எழுத்து "க" ஒன்று தான் உள்ளது. பிறகு 'ஹ' இணைக்கப்பட்டது அது போன்று Ba, Fa - க்கும் Ga-க்கும் வெவ்வேறு புது எழுத்தைக் கண்டு பிடித்தால் என்ன? இன்னும் ஓர் உதாரணம்: சரஸா, ஷைலஜா ஜலஜா சந்திரிகா, - நான்கும் அழகான நல்ல பெயர்கள். ஆனால் ஆதித் தமிழ் எழுத்து என்னவோ 'ச' ஒன்று தான் உள்ளது.

'ஸ', 'ஷ', 'ஜ' எழுத்துக்கள் பிற்காலத்தில் தமிழில் இணைக்கப் பெற்றன என்கிறார்கள். அவ்விணைப்பை நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் ஆகவே,இம்மாதிரி பல புது எழுத்துக்களை நாம் ஏன் உண்டாக்கக்கூடாது?

தமிழன்பர்கள் இத்துறையில் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும்.

—சிக்கிம் கவர்னர் ராஜேஸ்வர் மதுரையில் பேசியது.

தாஜ் மகாலுக்கு வயதாகி விட்டது

தமிழகத்திலிருந்து டில்லிக்குப் போகிறவர்கள் ஆக்ராவில் உள்ள தாஜ் மகால் என்னும் அழகிய சமாதியைப் பார்க்காமல் திரும்புவதில்லை. உலகத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற இச்சலவைக் கல் கட்டிடம் யமுனை நதியின் கரையில் கட்டப்பட்டுள்ளது. பால் போன்று வெளிச்சம் கொட்டும் முழுநிலாக் காலங்களில் 'வெள்ளை வெளேர்' என்று ஒளி தெறிக்கும் தாஜ் மகாலைப்பார்க்க வெளிநாட்டவரும், இந்தியரும் அதிக அளவில் ஆக்ராவுக்குச் செல்லுகின்றார்கள். அப்படி நேரில் சென்று பார்ப்பதை விட அழகாக இருக்கும் என்று கற்பனை செய்து கொள்வதே சிறப்பு. ஏனெனில் ஆங்கில அறிஞன் அல்டஸ் கக்ஸிலி நிலாக்காலத்தில் அதனைச் சென்று பார்த்து விட்டு, 'நான் நினைத்த அளவு, அது அழகாக இல்லையே' என்று வருந்துகிறான்.

இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் முகலாயப் பேரரசன் ஷாஜஹான் தனது மனைவி மும்தாஜ் என்பாளுக்குக் கட்டிய சமாதியே அது. அழியாத காதலுக்கு என்று அவன் கட்டிய அந்த நினைவகத்திற்கு இப்போது வயதாகி விட்டது. சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த ரத்தினக்கற்களையெல்லாம் காலங்காலமாக இழந்து, யமுனையின் அமிலச்சாக்கடையாக ஓடும் அழுக்கு நீரையும் பூசிக்கொண்டு மழையில் நனைந்து, வெய்யிலில் காய்ந்து கொண்டிருக்கும் இக்கட்டிடத்தின் மேற்பகுதி இப்போது இலேசாக விண்டு வருகிறது. மழைகாலத்தில் மேற்கூரையில் கசிவு ஏற்படுகிறது. அரசு திருப்பணி வேலையைத் தொடங்கி விட்டது. வெடிப்புகள் பூசப்படுகின்றன. இந்த வரலாற்றுச் சின்னத்துக்குப்பிறிதோர் அபாயமும் வந்துள்ளது. சீக்கிய பயங்கரவாதிகள் வெடிகுண்டு வைப்போம் என்கின்றனர். காவல் துறையினர் கெடுபிடி செய்கின்றனர். ஏழு மணிக்கே பார்வையாளர்கள் வெளியேற்றப்படுகின்றனர். வருகின்றோரைப் பரிசோதித்தே அனுப்புகின்றனர்.

ஆசிய ஜோதியும் ஆங்கில மூலமும்*

—பழநி. அரங்கசாமி

எட்வின் ஆர்னால்டு ஆங்கிலத்தில் எழுதிய புத்தரது வரலாற்றையும், கவிமணி தமிழில் புனைந்துள்ள ஆசியஜோதியினையும் ஒப்பீடு செய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கிய ஒப்பீடு இற்றை நாட்களில் கல்விக்கூடங்களிலும் பயிற்றுவிக்கப்படுகின்ற ஒரு புதிய கலையாகும். பெரும்பாலும் இந்த இலக்கிய கலை பற்பல காலங்களில், வேறுவேறு மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதாகும். ஒப்பீடு மிகுந்த கவனமுடன் செய்யப்பட வேண்டிய ஒரு இலக்கியப்பணி. படைப்போனின் ஆழ்ந்த சிந்தனை, கலைநுணுக்கம், இலக்கியச் சுவை, பரந்து பட்ட கற்பனை வளம் போன்றவற்றை சீர்தூக்கிப் பார்ப்பதோடு, அவன் வாழ்ந்த காலத்தின் கோலம், கலாச்சாரத்தின் தாக்கம் எந்த அளவு அவனது சிந்தனையைப் பாதித்திருக்கிறது அல்லது பயன்பட்டிருக்கிறது என்பதையும் காண்பதற்குத் துணை புரியும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்திய மண்ணில் தோன்றி அன்பையும் அருளையும் பரப்பியவர் புத்தர். இவரது வரலாற்றை லைட் ஆப் ஏஷியா எனும் தலைப்பில் எட்வின் ஆர்னால்டு ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இவர் நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர். இவரை அடியொற்றி புத்தரது வரலாற்றைத் தமிழில் வரைந்தவர் கவிமணி. புத்தரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறுதியிட்டுக் கூற முடியாது. கிறித்துவுக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே அவர் இந்நாட்டில் தோன்றியவர் என்பது ஒரு கணிப்பு. அத்துணைப் பழங்காலத்தில் அவர் வாழ்ந்தவர். காலப் போக்கில் அவரைப் பற்றிய புராணிகச் செய்திகளும் மலிந்து விட்டன. செவிவழிச் செய்திகள், வரலாற்றுக் குறிப்புகள், புராணிகக் கதைகள் ஆகியவற்றைத் தானறிந்தவாறு தொகுத்து அனைத்தையும் ஒரு சிறு காப்பியமாக்கியுள்ளார் ஆர்னால்டு. தாய்மொழியாகிய ஆங்கிலமேயன்றி பிரெஞ்சு, சமஸ்கிருதம், பாலி போன்ற அயல்மொழிகளிலும் பயிற்சி உடையவராக விளங்கியவர் அவர்.

* வானொலியில் ஒலிப்பரப்பாகிய இக்கட்டுரை நிலையத்தாரின் அனுமதியோடு வெளியிடப்படுகிறது.

பூனா, பம்பாய் ஆகிய இடங்களில் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்று லண்டனுக்குச் சென்ற எட்வின் ஆர்னால்டு புத்தரது வரலாற்றுக் கவிதையினை அங்கிருந்து ஆங்கிலத்தில் எழுதி வெளியிடுகிறார். இந்தியாவில் பிறந்தும் வளர்ந்தும், இந்நாட்டைப் பழித்தும் இழித்தும் பேசிய ரட்யார்ட் கிப்ளிங் போன்றோரைப் போலன்றி இந்நாட்டின் மீது அன்பு காட்டியவர் ஆர்னால்டு. கீதகோவிந்தம், இதோபதேசம், மகாபாரதம் போன்ற பழம்பெரும் இந்திய நூல்களையும் ஆங்கிலத்தில் இவர் பெயர்த்தெழுதியுள்ளார். லைட் ஆப் ஏஷியா எனும் நூலுக்கு அவரே எழுதிய முன்னுரையில் புத்தரெனும் ஞானியினது அருள் வாழ்வினைப் பாடுவதனாலே 'நான் இந்தியாவின் நண்பன்' என்பதை எதிர்காலம் அறிந்து கொள்ளும் என்று குறிப்பிடுகிறார்.

ஆர்னால்டு எழுதிய ஆங்கில நூலினை ஓரளவு தமிழில் தந்த நாஞ்சில் நாட்டுக் கவிமணியோ நாடறிந்த கவிஞர். இனிய சொல்லும் எளிய நடையும் சார்ந்த குழந்தைக் கவிதையும் இயற்றியவர். இராகம் கலந்து தாளம் போட்டு நடம்புரிதற்கேற்ற கீர்த்தனைகளையும் புனைந்தவர். தாலாட்டுப் பாடலில் தேவாரம் பாடிய நால்வரையும் வாயாரப் புகழ்ந்தவர். இவரது எளிமையும், புலமையும் அவரையொத்த பிற கவிஞரையும் தன்வயப்படுத்தும் தகுதி வாய்ந்தன. எனவேதான் தமிழக அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் கவிமணியை நெஞ்சாரப் பாராட்டியுள்ளார்.

துரும்பென மெலிந்த தேசம்
துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம்
இனியவே செய்யும் எண்ணம்
பரம் பொருள் நினைவே காட்டும்
பாரெல்லாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள்
கவிமணி வடிவமாகும்

தாம் பிறந்து வளர்ந்த நாஞ்சில் நாட்டில் கல்வித் துறையில் மலையாள மொழியின் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. இருப்பினும் கன்னித் தமிழின்பால் கவிமணி கொண்ட காதலை அது தடுக்க முடியவில்லை. தமிழிலக்கண இலக்கியத்தை மரபு

வழிப் புலவோரிடம் பழுதறக் கற்றுணர்ந்தார் தமது இலக்கியப் பார்வைக்குத் தமிழ் மட்டுமே என்று எல்லை வகுத்துக் கொள்ளாமல், ஆங்கிலத்தையும் கற்றுணர்ந்தார்.

கவிமணியின் கற்பனை முதிர்ச்சிக்கும், விரிவுக்கும் தமிழ்ப் புலமையோடு ஆங்கில அறிவும் காரணம். பத்தொன்பது இருபது நூற்றாண்டுகளைச் சார்ந்த தாமஸ் கிரே, வேர்ட்ஸ் வெர்த், கீட்ஸ், விலலியம் பிளேக், பிரௌனிங்' டென்னிசன் போன்ற ஆங்கிலக் கவிஞரையே அன்றி, அமெரிக்கப் பாவலனாகிய வால்ட் விட்மனையும் புத்தேரிக் கவிமணியார் கற்றுத் தேர்ந்துள்ளார். மொழி பெயர்ப்பாகவும், தழுவலாகவும் அன்னைத் தமிழுக்குக் கவியாரம் பூட்டியுள்ளார். தனது உள்ளத்தை ஈர்த்த சிறிய பாடல்களையே அன்றி நீண்ட கவிதைகளையும் அவர் பெயர்த்தமைக்குச் சான்றே ஆசிய ஜோதி என்னும் அழகிய பாடல் தொகுதி. லைட் ஆப் ஏசியா எனும் ஆங்கில நூலின் ஒரு பகுதியைத் தமிழாக்கம் செய்ததாகும்.

ஆங்கில மூல நூலை எழுதிய ஆர்னால்டு ஒரு கிறித்தவர். இதனை அடியொற்றி ஒன்பது பிரிவுகள் அடங்கிய ஆசியஜோதியை தமிழில் தந்த கவிமணியோ சைவ நெறியைச் சார்ந்த இந்து. இந்த இருவருமே தாம் பின்பற்றிய மதங்களுக்கு அப்பாலே நின்று புத்தனுக்குப் பாமாலை சூட்டுகிறார்கள். ஆயினும் புத்த மதக் கொள்கைகள் அனைத்தும் இவர்களுக்கு உடன்பாடு என்று கொள்ள இயலாது. எனவே புத்தமதக் கொள்கையினை விட கொல்லா நெறியைக் கொடி கட்டிப் பரப்பிய புத்த பிரானின் தனிப்பட்ட வாழ்க்கை தான் எட்வின் ஆர்னால்டு, கவிமணி இருவரையும் தன்வயப்படுத்தியுள்ளது.

காலம் காலமாக இந்த ஞாலத்தின் சிந்தனையைக் கவர்ந் திருப்பவன் புத்தன். போர் அபாயங்களினாலே இந்த உலகம் அழிந்து விடுமோ என்று அஞ்சுகின்ற காலங்களில் எல்லாம், அன்பு ஒன்றினாலே தான் மானுடம் பிழைத்திருக்க முடியும் என்ற அழியாத செய்தியைச் சொல்லிக் கொண்டிருப்பவன் புத்தன். புத்தா என்ற சொல்லுக்குத் தேர்ந்து தெளிந்த அறிவு என்பது பொருள். அதனை ஞானம் என்றும் சொல்லலாம். ஞானம் கைகூடுதல் எளிதான செயல் அல்ல. கேட்டுத் தெளிவு

பெறுதல், சிந்தித்தல், விதந்து பேசுதல், நிட்டையில் அமர்தல், வாதம் புரிதல் என்றின்ன பல நிலைகளையும் கடந்தே ஞானம் கைவரக் கூடும்.

கேட்டலுடன் சிந்தித்தல் கிளத்தல் நிட்டை
கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்

என்பர் சிவஞான சித்தியார். போதி மரத்தின் நிழலிலே நிட்டை கூடி ஞானம் கைவரப் பெற்றவன் புத்தன். அரண்மனை வாழ்வும் செல்வச் செழிப்பும், தாம்பத்ய சுகமும், குடும்ப நலனும் ஆகிய உலகியற் பிணிப்புகள் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. மரணமிலாப் பெருவாழ்வு காணத் துடித்து நின்றான் அவன். உலகியல் தளைகளை உடைத்தெறிந்து விட்டு நிர்வாணம் பூண்டு நாடு பல சுற்றிக் கானகம் போந்து வானகம் உய்க்கும் வழியினைக் கண்டான். ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடிய இந்து மதமே இந்தியாவுக்குச் சொந்த மதம். ஆனால் அதனின்றும் வேறுபட்டுப் புதிய மார்க்கத்தைக் கண்டவன் புத்தன். இருப்பினும் அவனது பிறப்பினால் இந்த நாட்டுக்குப் பெருமை என்கிறான் பாரதி.

புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு

இன்றைய நேபாளப் பகுதியிலிருக்கும் கபிலவாஸ்து என்னுமிடத்தில் 2600 ஆண்டுகளுக்கு முன் சாளுக்கிய வம்சத்து அரச குடும்பத்தில் பிறந்தான் சித்தார்த்தன். அவனைப்பெற்றெடுத்த மன்னர் பிரான் அவனை அரசகுமாரனாகவே வளர்த்தார். வாழ்வில் மேடு பள்ளங்களும் ஏமாற்றங்களும் வருத்தங்களும் அவனது சிந்தனைக்கும் எட்டாதவாறு செல்வச் செழிப்பிலும் ராஜபோகத்திலும் அவனை வளர்த்தார். உரிய காலத்தே அழகிய பெண்ணொருத்தியையும் மணம் புரிவித்தார். சம்பிரதாயமான தாம்பத்திய சுகத்தின் இடை நடுவே ராகுலன் என்றொரு குழந்தையும் பிறந்தது.

இதற்கிடையில் சித்தார்த்தனின் இருபத்தொன்றாவது வயதில் ஒரு வியத்தகு மாற்றம் நிகழ்ந்தது. தேர்மீது நகர் வலம் வந்த இளவரசனின் கண்ணிற் பட்ட காட்சிகளில் உலக வாழ்க்கை-

யின் அல்லலும் அநித்தியமும் தெற்றெனப் புலனாயின. தளர்ந்த கிழவனும், நோய் மலிந்த மனிதனும், எதிர் வந்த பிணமும் அவனது சிந்தனையைக் கலைத்து விட்டன. வாழ்க்கை என்பது மலர்ப்படுக்கை அல்ல என்பது தெளிவாயிற்று. மூப்பும் பிணியும் சாவும் ஆகிய காலமாறுபாட்டுப் பின் விளைவுகளிலிருந்து மானுடம் தப்ப முடியாது என்ற பேருண்மை அவனுக்கு விளங்கி விட்டது. ஆயின் இத்தீய விளைவுகளிலிருந்து மானுடத்தைக் காப்பதற்குரிய வழிகள் யாவை என்ற வினாவிற்கு விடை காண எண்ணினான். மக்களுக்கு அறிவு புகட்டும் இந்த மகத்தான பணியில் இறங்கி விட்ட சித்தார்த்தனுக்கு அரண்மனையும், இளம் மனைவியும், பிறந்த குழந்தையும் பெரிதாகத் தோன்றவில்லை.

கனகமணிக் கட்டிலைத் துறந்து கானகம் நோக்கிப் புறப்பட்ட சித்தார்த்தன் இமயத்துக் காடுகளில் ஏழாண்டு காலம் அலைந்து திரிந்தான். உடலை வருத்தி மயக்கமுற்று வீழ்வதினும் நிட்டையில் அமர்ந்து விடைகாண முயன்றான். இன்றைய பீகார் மாநிலத்தில் கயை எனுமிடத்துக்கு அருகில் போதி மரத்தடியில் ஞான ஒளி கண்டான். தான் கண்ட பேருண்மையினைப் பிறருக்கும் தெளிவுபடுத்தினான். சாரநாத் எனுமிடத்தில் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்திய புத்தன் சீடர்கள் புடைசூழஇந்தியாவின்வடகிழக்குப் பகுதிகளில் நாற்பதாண்டுகளுக்கு மேலாக தான்கண்ட பேருண்மையினைப் பிறருக்கும் எடுத்துரைத்தான். தனது தாரத்தையும், தனயனையும், அருமைத் தந்தையினைரும் தன் வழிக்குக் கொணர்ந்த புத்தன் தனது எண்பதாம் ஆண்டில் பருவுடலை நீத்தான் என்கிறது வரலாறு. ஆயினும் புத்தன் ஈந்த அருளுரைகள் அகிலமெங்கணும் போற்றப்பட்டு வருகின்றன. புத்தர் வாழ்ந்த காலத்திற்கு 300ஆண்டுகளுக்குப்பின் அசோகனே இந்திய மன்னருள் புத்த மதத்தை அரவணைத்தவன். எழுதாக் கிளவியாயிருந்த புத்தரின் தத்துவங்களைப் பாலி மொழியில் எழுதச் செய்தவனும் அவனே. போதி மரத்தடியில் தோற்றுவிக்கப்பட்ட அப்புத்த மத வளர்ச்சியில், பிற்காலத்தில் இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒரு தொய்வு விழுந்து விட்டதென்பது வருந்தத்தக்க வரலாற்றுச் செய்தி. வேற்று மண்ணிலிருந்து வந்து அதிகார பலத்தாலும், வன்முறையாலும் பரப்பப்பட்ட கிறித்தவமும் இசுலாமும், நாடெங்கணும் பரவ, அன்பிலும், அமைதியிலும் வேரூன்றிய புத்தமதம் மட்டும் பிறந்த மண்ணிலேயே மறந்து விடப்பட்டது என்பது விந்தையான

உண்மைதான். ஆயினும் இமயத்தடவரையில் திபெத்திலும், சிக்கிமிலும், பூடானிலும் புத்தமே தலையாய மதமாகும். இச்சிறு நாடுகளேயன்றி இலங்கை, தாய்லாந்து, பர்மா, வியட்நாம், ஜப்பான் போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் புத்தமதக் கொள்கையே நிலவி வருகிறது. உலக முழுதும் எழுபது கோடி மக்கள் புத்த நெறியைப் பின் பற்றி வருகிறார்கள்.

இந்து மதத்தைப் போலவே புத்த மதத்துக்கு மறுபிறப் புண்மையில் நம்பிக்கை உண்டு. மனிதனின் மறுபிறப்பு அவன் செய்யும் கர்மத்தின் பலனுக்கேற்பவே அமையும். எந்தப் பொருளின் மீதும் வைக்கின்ற பற்றும் பாசமும் அவனது துன்பங்களுக்குக் காரணம் ஆகிறது. எனவே ஆசையை அகற்று; பற்றினை விடு என்பதுவே புத்தநெறி. இதனைச் சாதிப்பதற்கு மனக்கட்டுப்பாடு அவசியம். ஓடியுழல் கறங்கு போலும் ஆடியுழல் சிந்தையை ஒடுக்கி அடக்கவேண்டும். மனோதிடத்தினாலே ஆசையைஅழித்து ஆன்மீக பலம் முதிரும் போது மனிதன் பிறவாழ் பேரின்பம் அடைகிறான். இதையே புத்தர்கள் நிர்வாணம் என்கிறார்கள். நிர்வாணம் எனும் சொல் வெறும் திகம்பரத் தன்மையை மட்டும் காட்டுவதாகக் எண்ணக் கூடாது. செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடாத நடுநிலைக்கு அப்பாலும் ஒரு விருப்பு வெறுப்பற்ற தன்மையினையே அச்சொல் குறிக்கும். புத்தர் வலியுறுத்திய இந்தக் கருத்தை ஆர்னால்டும் கவிமணியும் பரவலாகத் தத்தம் நூல்களில் வலியுறுத்துகிறார்கள்.

இவருள் ஆர்னால்டு எழுதிய ஆங்கிலக்கவிதை ஒரு முழு நிறைவான நூல். கௌதம புத்தரது வரலாற்றை அவரது பிறப்பு, வளர்ப்பு, மணம், துறவு, புத்தமத தோற்றம், அவரது பிரச்சாரம், இறுதிக்காலம் என்றின்ன பல்வேறு நிலைகளைப் பற்றியும், லைட் ஆப் ஏஷியா அல்லது மிகப் பெருந்துறவு (மகாபினிஷ்கிரமாணா) என்ற தலைப்பில் 3960 -வரிகளில் விரிவாக எடுத்தியம்புகிறது. உலகத்தின் மூன்றில் ஒரு பகுதியினர்புத்தபிரானின் செல்வாக்குக்கு உட்பட்டோர் என்றும் மனிதகுலச் சிந்தனையில் மிக உயர்ந்த இடம் பெறத்தக்கவையே புத்தபிரானின் அன்பும் அருளும் கலந்த ஆன்மீகக் கொள்கைகள் என்றும், ஆர்னால்டு 1888— ஆம் ஆண்டு தாம் எழுதி லண்டனிலிருந்து வெளியாகிய முதற்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். மேலும் அவர் சொல்வது போன்று

தென்கிழக்காசிய நாடுகளில் அன்றாடம் கோடிக்கணக்கான மக்கள் "புத்தபிரானே உம்மைச் சரணடைந்தேன் — புத்தபிரானின் அடியார்களே உம்மைச்சரண்டைடந்தேன்" என்னும் பொருள் பட

புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

என்று உளமுருகக் கூறி புத்தரை இறைவனாகவே வழிபடுகிறார்கள். புத்தனது வரலாற்றை எழுதுவதனாலே மேற்கத்திய, கீழை நாட்டுக் கலாச்சாரங்களுக்கு ஒரு இணைப்புப் பாலமாக இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன் என்றும் கூறுகிறார். ஆர்னால்டு.

புத்தனது சரிதத்தை நிரல்பட அமைத்து வரன்முறையாக எழுத வேண்டும் என்கிற திட்டமேதும் கவிமணிக்குக் கிடையாது. மருமக்கள் வழி மான்மியம் என்னும் அவரது அங்கத நூல் நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகத்தைச் சீர்திருத்தும் நோக்கில் திட்டமிட்டு எழுதப்பட்டது. ஆனால் ஆசிய ஜோதியோ, அப்படி எழுதப்படவில்லை. ஆங்கில நூலைப்பயின்று, அதனுள் தன்னுடைய விருப்பத்திற்கேற்ற சிற்சிலபகுதிகளை, மொழி பெயர்த்து பத்திரிகைகளுக்கு அனுப்பி வெளியிடச் செய்கிறார். 1938-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழப் பதினோரு ஆண்டுகளுக்குள் இந்த நூல் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டது.

குமரன் என்னும் மாத இதழை நடத்தி வந்தவரும் தேசீயப்பற்று மிகுந்தவருமான முருகப்பா எனும் இலக்கிய அன்பர் லைட் ஆப் ஏஷியா எனும் ஆங்கிலக்கவிதை நூலைக் கவிமணிக்கு அனுப்பித் தமிழிலும் அதுபோன்றே புத்தர் வரலாற்றினைத் தருதல் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கவிமணியோ நண்பரது விருப்பத்திற்கிணங்க புத்தரது முழு வரலாற்றைப் பாடவில்லையாயினும், பிம்பிசாரனது வேள்வியில் கொலை செய்யப்பட இருந்த ஆடுகளைக் காப்பாற்றி மன்னனது மனதை மாற்றிய நிகழ்ச்சியை 'கருணைக்கடல்' என்ற தலைப்பில் கவிதையாக எழுதி நண்பருக்கு அனுப்பி வைத்தார். இதுவே முதன் முதலாக குமரன் பத்திரிகையில் வெளி வந்தது. இதனைத் தொடர்ந்து 'ஆசிய ஜோதி'யின் பிற எட்டுப்பகுதிகளான புத்தர்

அவதாரம். அருள் உரிமை, காதல் பிறந்த கதை, சித்தார்த்தன் கேட்ட தேவகீதம், சித்தார்த்தன் துறவு புத்தரும் ஏழைச்சிறு வனும், புத்தரும் சுஜாதையும், புத்தரும் மகனை இழந்ததாயும் ஆகியவை முன்பின்னாக உருப்பெற்று அவ்வப்போது வெளியிடப் பட்டனவாகும். ஒன்பது பகுதிகளும் சேர்த்து 1880-அடிகளைக் கொண்டு 1952 - ஆம் ஆண்டில் 'ஆசிய ஜோதி' எனும் தலைப்பில் ஒரு சிறு நூலாக வெளி வந்தது. தனியாக இதனை நூலாக வெளியிடும் திட்டம் தொடக்கத்தில் இல்லாமையினாலே இந்த நூலுக் கென்று கவிமணியால் முன்னுரை ஏதும் எழுதப்படவில்லை. இருப்பினும் தண்ணளியும், பொறுமையும் வாய்ந்த புத்தபிரானின். வாழ்விலும் வாக்கிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் கவிமணி என்பதில் ஐயமில்லை.

ஏறத்தாழ நாள்காயிரம் பாடல்வரிகளைக் கொண்ட மூல நூல் ஆசிரியப்பாவுக்குச் சமம் எனக் கொள்ளத் தகும் Blank Verse-ஆல் எழுதப்பட்டுள்ளது. கவிமணியோ, விருத்தம், ஆசிரியப்பா சிந்து, தாழிசை ஆகிய பல்வேறு வகைப் பாக்களைக் கையாண்ட மையினால் கதைப் பொருளுக்கேற்ப கவிதை நயம் கொண்டு விளங்குகிறது. எட்வின் அர்னால்டு எழுதிய ஆங்கில நூலைத் தவிர வேறு எந்த நூலையும் கவிமணி துணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் ஆங்கில முதனூலில் பற்பல பகுதிகளை முற்றுமாக ஒதுக்கி விட்டு தனக்குத்பிடித்தமான பகுதிகளை மட்டும் கவிமணி அழகுபடத் தமிழ்ப்படுத்தியுள்ளார். ஆங்கில மூல நூலில் கவிமணி ஒதுக்கிய பகுதிகளில் சிற்சில மிகவும் சுவைபடவே இருந்தாலும் அவர் ஏன் அவற்றை ஒதுக்கி விட்டார் என்பதற்குரிய காரணத்தை நாம் அனுமானிக்க முடிகிறது.

— தொடரும்

கட்டுரையாளர்களின் கவனத்திற்கு

— செந்தமிழ் இதழில் வெளியிடுவதற்கு வரும் கட்டுரைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

— தட்டச்சு செய்திருப்பின் நன்று.

— கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்திலேயே எழுதப்படல் வேண்டும்.

— ஆசிரியர்.

நூலகத்திற்கு அன்பளிப்பு

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னாலே மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் மாணவராக இருந்தவர் திருமலை அய்யங்கார். அவரது இனிய நினைவை நாம் என்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். காலஞ் சென்ற திருமலை அய்யங்கார் அவர்கள் மதுரைக் கல்லூரியைச் சார்ந்த மேனிலைப்பள்ளியில் தமிழ்ப்பணி ஆற்றி ஒய்வு பெற்றவர். அவர் பயன்படுத்தியவற்றுள் இருபத்திரண்டு தமிழிலக்கிய நூல்களை அவரது துணைவியார் திருவேங்கிடத்தம்மாள் சென்ற வாரம் தமிழ்ச்சங்க நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். அன்புக்கணவரின் நினைவோடு அவர் பயின்ற தமிழ்ச்சங்க வளர்ச்சியினையும் உளத்திற் கொண்டு நூற்கொடை நல்கிய அம்மையாருக்கு நமது வாழ்த்தும் வணக்கமும் உரியன.

—ஆசிரியர்.

மங்கோலிய மொழியில் ராமாயணம்!

காளிதாசன் எழுதிய "மேகதூதம்", ராமாயணம், பஞ்சதந்திரம் உள்பட ஏராளமான சமஸ்கிருத, ஹிந்தி படைப்புகள் மங்கோலிய மொழியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

மங்கோலியாவின் தலைநகரான உலான் பாடரில் உள்ள பொது நூலகத்தில் இவை வைக்கப்பட்டுள்ளன. அங்கு சமஸ்கிருத ஆயுர்வேத சாஸ்திரம் மொழி பெயர்க்கப்பட்டு அத்தோடு 226 புத்தகங்கள் உள்ளன. அனைத்தும் மொழி பெயர்ப்பே.

மங்கோலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையே நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக கலாச்சார உறவு இருப்பதாக இந்தியாவுக்கான மங்கோலியத் தூதர் யுனிஹாஸ் பயர் தெரிவித்தார்.

இந்தியா - மங்கோலியா உறவு 30 ஆண்டுகள் நிறைவு பெற்றதையடுத்து நடந்த விழாவில் அவர் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளின் உறவும் மேலும் வளரும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மங்கோலியாவுக்கு வடக்கே ரஷியா உள்ளது. தெற்கு, கிழக்கு மேற்கு பகுதிகளில் சீனா உள்ளது. இங்கு கம்யூனிஸ்ட் கட்சி அரசு செலுத்துகிறது. மங்கோலியா ரஷிய சார்புடைய நாடாகும்.

நூல் மதிப்புரை

நூல் : அறிஞர் மு.வ.
ஆசிரியர் : டாக்டர். இரா. மோகன்
வெளியீடு : மணிவாசகர் பதிப்பகம்

ஆரம்ப ஆசிரியராக இருந்து கல்லூரிப் பேராசிரியராகி பின்னர் பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பதவியேற்று அரும்பணி புரிந்தவர் டாக்டர் மு.வ இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டின் புத்தகக் கடைகளில் அவரெழுதிய நூல்களைமட்டும் தனியே வரிசைப்படுத்தி விற்பனை செய்வர். தமிழ்ப் பண்டிதர்களைப் பௌராணிகராகவும், பழம்பெருமை பேசுவோராகவும் கடுநடையில் எழுதுவோராகவும் கருதிக்கொண்டிருந்த பண்டைநாட்களில் எளிய இனிய தமிழில் படைப்பிலக்கியம் தந்து இலக்கிய உலகில் அவர் ஒரு புதிய யுகத்தைப் படைத்தவர். அவரதுஎழுத்துகளைப்பல்வேறு கோணத்தில் அய்ந்து பயின்ற டாக்டர் மோகன் அவரது நாவல்களை ஆய்ந்து ஒரு நூலும், கடிதங்களைத் தொகுத்துப்பிறிதொன்றும் வெளியிட்டவர். எட்டு கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நாலும் அத்தமிழறிஞரது படைப்பிலக்கயங்களை ஆய்வதோடு, அவரை ஒரு சிந்தனையாளராக, ஆய்வாளராக உவமைக்கலைஞராக ஆய்ந்து பார்க்கின்றது. மு.வ வின் வாழ்வும் வாக்கும் எந்த அளவில் நூலாசிரியரை ஆட்கொண்டுள்ளது என்பதற்கு இந்நூலேஒரு சான்று நூலின் தொடக்கத்தில்முப்பதுபக்கஅளவில்அத்தமிழறிஞரின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகவும்சுவைபடவும் எழுதப்பட்டுள்ளது. மு.வ.வின் நினைவுக்குறை ஒரோவழி வருகின்ற சிற்சில பிழைகள் ஆகியனவற்றையும்சுட்டிக்காட்டுவதுநூலாசிரியரின் நடுநிலையினை வெளிப்படுத்துகிறது. பெண் பாத்திரப் படைப்பில் காதல், மரணம், பெயரிடு முறை பற்றிக் கூறும் இந்நூல், கரித்துண்டு எனும் நாவல் கற்புக்குப புதுவிளக்கம் கொடுப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கலாம். அத்தோடு மு.வ. வின் எழுத்துகளைப் பல்காலும் ஆய்ந்து பார்க்கின்ற ஆசிரியர் அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு என்ற தலைப்புகளில் அவர் வெளியிட்ட நூல்களைப் பற்றி யாதொன்றும் கூறவில்லை. இச்சிறுகடித நூல்களில் அனுபவம் மிக்க ஒரு சிந்தனையாளராக மு வ. வெளிப்படுகிறார். இருப்பினும் அத்தமிழறிஞரைப் பற்றியும் அவர் தம் படைப்பிலக்கியம் குறித்தும் இந்நூல் சிறந்த கருத்துகளைக் கொண்டிலங்குகிறது. அழகிய முறையில் அச்சிடப்பட்ட இந்நூலைத் தமிழகம் விரும்பி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

திரையன்

இலக்கிய நோபெல் பரிசு பெற்ற

கிளாட் சைமன்

— S. கண்ணப்பன்

1985-ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபெல் பரிசு கிளாட் சைமன் (Claude Simon) என்ற பிரெஞ்சு நாவலாசிரியருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டினருக்கு மட்டுமல்லாது, தன் சொந்த நாட்டு மக்கள் பலருக்கும் கூட இவர் நன்கு அறிமுகமானவரல்லர். எனவே, இருநூறு ஆண்டை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் நோபெல் பரிசாளர்களைத் தேர்வு செய்யும் ஸ்வீடன் நாட்டு நிறுவனம் இவர் பெயரை அறிவித்த பொழுது பலரும் வியப்புற்றனர். இருப்பினும் உலகின் மிக உன்னத பரிசுக்கு இவரைத் தெரிவு செய்திருப்பதானது ஜனரஞ்சகமும், விளம்பரமும் மட்டுமே ஒருவரின் ஆற்றலை நிர்ணயிப்பன அல்ல என்பதைக் காட்டுகிறது.

1964-இல் தான் எழுதிய கட்டுரையொன்றில் இலக்கியமும், கலையும் மனிதனின் இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்கின்றன என்று கூறுகிறார் சைமன். இவருக்குப் பரிசினை அளித்த நோபெல் அகாடெமியோ, கவிஞன்,ஓவியன் ஆகியோரின் படைப்பாற்றலுடன் காலத்தின் மாயையும் இவருடைய நாவல்களில் இணைந்து காணக் கிடக்கிறது என்று பாராட்டுகிறது.

இந்த எழுபத்திரண்டு வயது நிரம்பிய நாவலாசிரியர் 1941-இல் தான் எழுதத் தொடங்கினார். இதுகாறும் பத்துக்கும் மேற்பட்ட நாவல்களை பிரெஞ்சு மொழியில் படைத்திருக்கிறார். அவை யாவும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் பிளாண்டர்ஸ் சாலை (The Flanders Road) அரண்மனை (The Palace) வரலாறு (History) பார்சலஸ் போர் (The Battle of Pharsalus), காற்று [Le vent), ஜியார்ஜிக்ஸ் (The Georgics) ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன. பிளாண்டர்ஸ் சாலை, வரலாறு, ஆகிய இரு நாவல்கள் ஐரோப்பியாவிலேயே பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றவை.

கிளாட் சைமன் புதிய முறையிலான நாவல்களுக்கு (experimental school of fiction) அடிகோலியவர். இந்நூற்றாண்டின் ஐம்பதுகளில் பிறப்பெடுத்த ஒருவகைப் புது நாவல்களின் (nouvean roman new novel) முன்னோடி. மரபை மறுக்கும் இன்னொரு நாவலாசிரியர் மார்க்ரெட் துராஸ் (Magurite Duras) போல் கல்விக்கூட வேலிகளுக்கு அப்பாலும் கூட சற்று விவாதத்தை கிளப்பியிருப்பவர். இளம் வயதில் பிரௌஸ்ட் (Proust) வில்லியம் பாக்னர்) (William Faulkner) ஆகியோரின் இலக்கியத் தாக்குதலுக்குட்பட்ட காரணத்தால் மொழி மரபை உடைத்தெறிந்து நிறுத்தற் குறிகள் இல்லாத நீண்ட வாசகங்கள், நிகழ்நிலை வினைச்சொற்கள், மேற்கோள்கள் ஆகியவற்றை அசாதாரண முறையில் கையாண்டவர் இவர். பல்லாண்டுகளுக்கு முன்னரே புரட்சிகரமாய் தோன்றிய, ஆனால் இன்று 'உயர் ஜாதி' இலக்கிய நுகர்வோரால் அங்கீகரிக்கப்பட்ட நனவோடை (stream of conciousness) உத்தியினைக் கையாண்ட நாவலாசிரியர்களில் இவரும் ஒருவர். படைப்பாற்றல் கோணத்தை முன்னும் பின்னும் முறை பிறழ்ந்து பயன்படுத்தியவர். நிகழ்ச்சிகளை வரலாற்றுக் கோர்வையாக (Chronological order) கால வரன்முறையாகக் (time sequence) கூறினால் தான் உளவியல் யதார்த்த நிலை எய்திட இயலும் என்ற மரபுச் சரையை நீக்கியவர் 1981 - இல் வெளியான அவரது நாவல் தெ.ஜியாரஜ்க்ஸை இங்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கூறலாம். இந்நாவலில் மூன்று முக்கிய கதா பாத்திரங்கள் உள்ளன — 1940 - ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பிளான்டர்ஸ் போரில் பங்கு பெற்ற ஓர் இளைஞன், 1936 - ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டு உள்நாட்டுப் போரில் புரட்சிக்காரர்களின் அணியில் போரிட்ட ஓர் ஆங்கிலேயர் 18 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ஓர் இராணுவ அதிகாரி. இம்மூவரின் செயல்களும் கால வரன் முறை பிறழ்ந்து சொல்லப்பட்டுள்ளன. தொடர்ச்சியான கதையம்சமோ, சம்பவங்களுக்கிடையே இறுக்கமான பிணைப்போ காணப்படவில்லை. தனித்தன்மை வாய்ந்த இப்பாத்திரங்கள் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. இருப்பினும், பொதுவான சில அம்சங்களும், வேற்றுமையுள் ஒற்றுமையும் இந்நாவலுக்குப் பொருளூட்டுகின்றன. இந்நாவலில் காணப்படும் சில சம்பவங்கள் ஆசிரியரின் வாழ்வோடும், நினைவோடும் உணர்வோடும் ஒன்றி-

யவை. இறப்பு, இழிவு, பாலுணர்வு, குழப்பம் போன்றவை மலிந்து கிடப்பினும், வாழ்வில் ஒழுங்கும், தொடர்ச்சியும் உண்டு என்ற கருத்தே மிகுதியும் வலியுறுத்தப்படுகிறது. சாதாரணமாக இசை-யிலும், ஓவியத்திலும் காணப் பெறும் அழகியல் கட்டமைப்பும், ஆசிரியரின் அகன்ற சரித்திர பூர்வதிருஷ்டியும், இந்நூலுக்குத் தனிச் சிறப்புச் சேர்க்கின்றன.

பாரதிதாசன் ஒரு குழந்தை

எண்ணற்ற கவிதை மலர்களை தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தவர் புதுவைக் கவிஞர் பாரதிதாசன். பல்லாயிரக் கணக்-கில் விற்பனையாகும் அவரது முதல் கவிதைத் தொகுதி இளங்-கவிஞர்க்கு இன்றும் ஒரு வழி காட்டி. கவிதைகளோடு எண்ணற்ற நாடகங்களையும், காப்பியங்களையும் எழுதிக்குவித்த புரட்சிக் கவிஞர் இறவாத புகழ் படைத்தவர். அவரைக்குழந்தையாகப் பாவித்து புலமைப்பித்தனார் இசைத்துள்ள பாவேந்தர் பிள்ளைத் தமிழ் சேலம் அரிமாப்பதிப்பகத்தாரால் அண்மையில் வெளியிடப்-பட்டுள்ளது. சீரும் சிறப்பும் குலையாமல் மரபுக் கவிதை உயிர் வாழ்கிறது என்பதற்கு இந்நூல் ஒரு சான்று. பிள்ளைத் தமிழில் காணப்படும் புராணப் புளுகு கலவாமல் இயற்கை நலம் பொலிய மிடுக்கான தமிழில் பீடு நடைபோடும் இப்பிள்ளைத் தமிழினை வாய்விட்டுப் பயின்று மகிழலாம். சந்தப் பாடல்களும் விரவிவரும் இச் சிறந்த பிள்ளைத் தமிழுக்கு விரிவுரை நல்கிய புலவர். இராம-நாதன் அவர்கள் பாவேந்தரோடு நெருங்கிப் பழகிய தமிழறிஞர். கவிஞரும் காதலும் எனும் நூலெழுதி பாவேந்தராலேயே பாராட்டப்பட்டவர். இவர் இப்பிள்ளைத்தமிழின் பல் சுவையும் தோயப் பயின்று அழகிய உரை நல்கியுள்ளார். நூலை அழகுற அச்சிட்டுள்ள அரிமாப் பதிப்பக உரிமையாளர் புலவர் சின்னாண்-டார் பாராட்டுக்குரியவர். பாவேந்தர் பிள்ளைத் தமிழ் என்னும் இந்நூலினைத் தனிப்பட்டோரேயன்றி பள்ளி, கல்லூரி நூலகங்-களும் பெருமளவில் வாங்குதல் சிறந்த தொண்டாக அமையும்.

— நூல் : பாரதிதாசன் பிள்ளைத்தமிழ்

— வெளியீடு : அரிமாப் பதிப்பகம்

அம்மாப்பேட்டை - சேலம் - 3.

நூல் மதிப்புரை

நூல் : மு.வ. வின் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்.
ஆசிரியர் : டாக்டர். அ. சிவக்கண்ணன்.
வெளியீடு : மதுரா பதிப்பகம்,
C 210, நெல்லையப்பர் தெரு.
திருநகர், மதுரை-625006
விலை : 30/-
பக்கங்கள் : ٢51

டாக்டர் மு.வ.வின் நூல்களைப் பற்றிய இந்த ஆய்வு நூல் தனித் தன்மை உடையது.

தமிழ்ச் சமுதாய வாழ்க்கையை மீட்டு உருவாக்கும் ஒரு முயற்சியாக மு.வ. தமது நூல்களைப் படைத்தார் என்ற அணுகு முறை புதுமையானது.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த மு. வ. தம் நாவல்களில் சமுதாயச் சிக்கல்களைக் காட்டுவதுடன் நின்றுவிடாமல் அவற்றிற்குத் தீர்வுகளையும் தாமே தருகிறார் என்பதனை ஆசிரியர் சிவக்கண்ணன் தெற்றென விளக்குகிறார்.

ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலேயே ஆசிரியர் தமது நோக்கத்தைச் சுருக்கமாகத் தந்துள்ளது படிப்போர்க்கு ஆர்வமூட்டும் வகையில் அமைந்துள்ளது. மு. வ. தமது கதை மாந்தர் வாழ்க்கை அனுபவங்களின் வாயிலாக மனம் பண்படுவது பற்றி எழுதிய, 'செந்தாமரை', 'கள்ளோ? காவியமோ?', 'பாவை', 'அகல் விளக்கு' வாடாமலர் ஆகிய நாவல்கள் பற்றி, ஆசிரியர் தமது கருத்துக்களை வெளியிடுவதோடன்றி டாக்டர், மு. வ. வின் மேற்கோள்களையே எடுத்துக் காட்டியுள்ளது பாராட்டிற்குரியது[பக்-38] சான்றோரின் நூல்களைப் பயிலுதலே மன மாற்றத்திற்கு வழிகோலும் என மு.வ. கருதுவதை ஆசிரியர் திறம்பட எடுத்தியம்புகிறார். பாலியல் கருத்துக்களை மையமாகக் கொண்ட மலர்விழி, அல்லி போன்ற நாவல்களின் ஆய்வுமூலம், தமிழ்ச்சமுதாயத்தின் பாலியல் கருத்துக்கள் பற்றி சிந்தையை ஈர்க்கும் வண்ணம் எடுத்-

துரைக்கும் ஆசிரியர், தமது கருத்துக்களை மு. வ, கதை மாந்தர் மூலம் வெளியிடுவதைப் பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார்.

முற்போக்கு எழுத்தாளர்களின் முன்னணியில் நிற்கும் மு. வ. கலப்பு மணம், காதல் மணங்களை ஆதரித்தாரேயன்றி, கைம்பெண் மணத்தைத் தமது கதைகளில் கூட ஆதரிக்காமல், இளம் விதவைகள் சமூகத் தொண்டில் ஈடுபடுவது போல் எழுதியது குறித்து ஆசிரியர் குறிப்பிடும் பொழுது நாம் வியக்கிறோம். "சமூகத்தில் ஏற்படும் பாலியல் சிக்கல்களுக்கு சமுதாயத்தைப் பொறுப்பாக்கும் மு. வ. தமிழகத்தின் உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்" [பக் - 97] என்கிறார் ஆசிரியர்.

கலைஞரின் இயல்புகளை நுணுகி அறிந்து எழுதும் ஆசிரியர், மு. வ. உணர்த்தும் பொருளாதாரத் திட்டத்தையும் நம்முன் படைக்கிறார் [பக் - 107].

மு. வ படைத்துக் காட்டும் புதியகற்புக் கோட்பாடு, வாசகரின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைவதை ஆசிரியர் பாராட்டுகிறார். [பக்-108]. காலத்துக்கு ஒவ்வாத கோட்பாடுகளை மாற்றி, புதுக் கோட்பாடுகளை ஏற்று, இல்லற வாழ்க்கையை இனிமை நிறைந்ததாக ஆக்குமாறு கூறும் ஆசிரியருடன் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. மு. வ. தமது பெற்ற மனம்' என்ற நாவலில் எளியவர்கள் வலியவர்களால் புறக்கணிக்கப் பட்டு, துன்புறுத்தப் படுவதைக் காட்டுவதுடன் மட்டும், நின்றுவிடாமல் அதற்குப் பரிகாரமாக என்ன செய்ய வேண்டும் என்று கூறியுள்-ளதையும் ஆசிரியர் இயம்புகிறார். இன்றைய சமுதாயத் தீமைகளை ஓட்ட, இதை விடச் சிறந்த மருந்து ஒன்று உண்டோ?

உலகம் உள்ள அளவும் நன்மையும், தீமையும் இருந்தே தீரும். நன்மை-தீமைகட்கு இடையில் நடைபெறும் இத்தந போராட்டங்களை அந்த நாள், கயமை மண்குடிசை போன்ற புதினங்களில் காட்டுவதுடன் அமையாமல், இறுதியில் நன்மையே வெல்லும் என்றும் மு.வ எடுத்துக் காட்டுவதைப் பாராட்டும் ஆசிரியர், மு. வ வின் 'மண்குடிசையை' எச். ஜி வெல்சின் "மாய மனிதன்" (The Invisible Man) என்ற நூலுடன் ஒப்பிட்டுக் காட்டுவது அருமை. [பக்-134-135]

ஒரே இயலில் கதைமாந்தர் பண்படும் நாவல்கள் [பக்-143 - 183] பாலியல் சிக்கல் நாவல்கள் [பக் 147 - 187], கலைஞர் நாவல் [பக் - 152 - 191], எளியவர் வாழ்க்கைச் சித்தரிப்பு நாவல் — [பக் - 153 - 192], நன்மை - தீமை போர் விளக்க நாவல்கள் - [பக் - 155 - 194] எனப் பொதுவாக ஒருமுறையும், மறுமுறை 'கல்வி' என்ற உட்தலைப்பின் கீழும் எடுத்து ஆய்ந்து கல்வியின் சிறப்பை எடுத்துரைப்பது ஆசிரியரின் ஆராய்ச்சித் திறமைக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

மு. வ. வின் நாவல்கள் வாழ்க்கை அனுபவங்களை ஒட்டி அமைவதால், அவற்றில் தமது நாவல்கள் சிறப்புடன் அமையப் பல்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளார் என எடுத்துக் காட்டும் ஆசிரியர், மூன்று இயல்களில், "கலைஞர் நாவல், எளியவர் வாழ்க்கைச் சித்தரிப்பு நாவல், நன்மை - தீமைப் போர் விளக்க நாவல்கள், பாலியல் சிக்கல் நாவல்கள்" என்ற தலைப்புக்களையே மீண்டும், மீண்டும் பயன்படுத்துவது அலுப்பூட்டுவதாக அமைந்துள்ளது. பயனுள்ள மதிப்பீட்டிற்குப் பின் மு. வ. வின் வாழ்க்கை வரலாறு பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

ஒன்பது இயல்களை உடைய இந்த ஆராய்ச்சிநூல், மு. வ. நாவல்கள் எனும் ஒன்பான் சுவை விருந்தை அழகுறப் படைக்கிறது.

—செல்வி. சரஸ்வதி

தமிழில் முடியுமா?

—O—

பொறி இயல், மருத்துவம் ஆகியவற்றைத் தமிழில் போதிக்க இருக்கும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் முயற்சிகளுக்கு பல்வேறு எதிர்ப்புகள் உள்ளன. எந்த நல்ல திட்டத்திற்கும் எதிர்ப்பு இல்லாமல் இல்லை. முயற்சியினைத் தொடர்ந்து செயல் புரிந்து பல்கலைக் கழகம் வெற்றி பெற எமது வாழ்த்துகள்!

கடல் கடந்த கண்ணன்

(ஹரே கிருஷ்ண இயக்கம்)

(பி.ஆர். ஸ்வாமி)

—சென்ற இதழ்த் தொடர்ச்சி

திருமணம் முடிந்தவுடன் இல்லற வாழ்க்கையினைத் துய்க்காது ஆபே சரன் தொடர்ந்து துறவு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டார் என்று கூறி விட முடியாது. கல்லூரிப் படிப்பை முடித்து விடவேண்டும் என்ற நோக்கத்தில் திருமணத்திற்குப்பிறகு இவர் தனது பெற்றோருடன் தங்கி விட்டார். இவரைக் கரம்பிடித்த ராதாராணி யோ அவரது பிறந்தகத்திலே இருந்து வரலானார். இதற்கிடையில் ஆபே சரனது கல்லூரி வாழவில் ஒரு ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. ஆன்மீக உணர்வோடு கண்ணன் மீது ஆராக் காதல் கொண்டு கிடந்த இந்த இளைஞரை அரசியலும் தன் வயப்படுத்தியதே ஒரு வியத்தகு நிகழ்ச்சி அல்லவா!

ஆபே சரனுக்கு ஒரு வகுப்பு முன்னதாகப் படித்துக் கொண்டு இருந்த மாணவன் சுபாஷ் சந்திரன் வெள்ளையரை எதிர்க்கும் வீரதீரச் செயலுக்கு மாணவரைத் திரட்டிக் கொண்டிருந்தான். அவனது உறுதியும், நாட்டுப் பற்றும், கடல்மடை திறந்தாற் போன்ற சொற்பொழிவும் ஆபே சரனை மயக்கி விட்டது. இதனைப் போன்றே இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட மோகன்தாஸ் என்பாரும் ஆபே சரனைக் கவர்ந்தவர். மது, மாது, மாமிசம் ஆகிய எந்தப்பழக்கமும் இல்லாது தூய்மையான வாழ்க்கை நடத்தி வந்த மோகன்தாஸ் காந்தியிடம் ஆபே சரனுக்கு ஏற்பட்ட அளவற்ற மதிப்புக்கு இன்னொரு காரணமும் உண்டு. எங்கு சென்றாலும் பகவத் கீதையைக் கையிலே வைத்துப் படித்துக் கொண்டிருப்பதும், சொற்பொழிவாற்றும்போது கீதையை மேற்கோள் காட்டுவதுமாகிய மோகன்தாஸின் பழக்கங்களே அவை. இவ்வாறு இளமைக் காலத்தேயே ஆபே சரனைக் கவர்ந்த இருவரும் நேதாஜி சுபாஷ் போசும், மகாத்மா காந்தியும் என்று சொல்லத் தேவையில்லை.

இந்திய நாட்டுக் கல்லூரி மாணவர்கள் தங்களது படிப்பைக் கூடச் சற்றே ஒதுக்கி விட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட காலம் அது. அயலவன் கொடுக்கும் ஆங்கிலக்கல்வி அடிமைத் தனத்தின் சின்னம் என்ற உணர்வு அந்நாட்களில் மேலோங்கியிருந்தது. இப்படி கல்லூரி இளைஞர்களிடம் நாட்டுப் பற்றும், ஏகாதிபத்திய

வெறுப்பும் வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடும்போது ஆபே சரன் மட்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா! ஒருவகையாக நான்கு ஆண்டுக் கல்லூரி படிப்பு முடிந்து தேர்வும் எழுதி வெற்றி பெற்று விட்டார். ஆயினும், கல்லூரிக்குச் சென்று சான்றிதழையும் பட்டத்தையும் பெற மறுத்து விட்டார். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் நடத்திய காந்திஜியின் வேண்டுகோளை நிறைவேற்றி விட்ட மனநிறைவு ஆபே சரனுக்கு அப்போது தான் ஏற்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தில் ஜாலியன் வாலா பாக் எனுமிடத்தில் ஒரு பெரும் படுகொலை நடந்தது. ஜெனரல் டயர் எனும் ஈவிரக்கமற்ற கொடியவனின் வெறிச் செயல் நூற்றுக்கணக்கான இந்தியர்களை அன்று கொன்று குவிப்பதற்குக் காரணமாக இருந்தது. இமய முதல் குமரி வரை இந்திய நாடே கொதித்தெழுந்த அந்நாட்களில் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தார். இங்கிலாந்திலிருந்து வரும் எந்தப் பொருளையும் இந்தியர் யாரும் வாங்கக் கூடாது என்று ஆணையும் விடுத்தார். தேசிய உணர்ச்சி இப்படி அலை மோதிக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஆபே சரன் விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுநேர ஊழியரைக் கொள்ளத் திட்டமிட்டு விட்டார். பையனின் தந்தைக்கோ அவனது அதிதீவிரப்போக்கிலிருந்து அவனைத் திருப்பி விட வேண்டுமே என்ற கவலை. அவர்களது குடும்ப நண்பரான டாக்டர் கார்த்திக் சந்திரபோஸ் மருத்துவத்தில் வல்லவர். ஒரு சிறு இரசாயன தொழிற்சாலையும் நடத்தி வந்தார். இங்கே மேற்பார்வையாளர் பதவியில் ஆபே சரனை அமர்த்தி விட்டார்கள். இந்தப்பணியில் அமர்ந்தாலும், தூய கதராடைஅணிந்து கொண்டு நாட்டு விடுதலையே சிந்தித்துக் கொண்டிருக்கும் மனப்போக்கு மட்டும் ஆபே சரனிடமிருந்து மாறவில்லை. தற்காலிகமாக நட்ட வைக்கப் பட்ட இந்த மேலாளர் பதவியில் ஓரிரண்டு ஆண்டுகள் கழிந்தன.

1922-ஆம் ஆண்டின் தொடக்கம். கல்கத்தாவின் புறநகர்ப் பகுதியில் கௌடிய மடம் அனைவருக்கும் அறிமுகமான ஒரு ஆன்மீக நிலையம். பகவான் சைதன்யரின் சீடராகவும், இறைமைத் தொண்டில் ஈடுபடுத்திக் கொண்டவராகவும் விளங்கிய பக்தி சித்தாந்த சரஸ்வதி சுவாமிகள் கௌடிய மடத்தில் தங்கியிருந்தார். தனது நண்பன் ஒருவனின் பிடிவாதமான அழைப்பின் பேரில் ஆபே

சரன் அங்கு செல்வது வழக்கம். கதராடை அணிந்து மடத்துக்கு வரும் இளைஞனைப் பார்த்ததும் பக்தி சித்தாந்தருக்கு ஒரு வியப்பு. அவன் போக வேண்டிய இடமும் ஆற்ற வேண்டிய பணியும் முற்றும் வித்தியாசமானது அல்லவா! இருப்பினும் தனது வியப்பினை வெளிக்காட்டாமல் சித்தாந்த சரஸ்வதி சுவாமிகள் பொதுப்படை யாக ஒரு கேள்வி கேட்டார்.

படித்த இளைஞர்களாகிய நீங்கள் ஆன்மீகப் பற்றுடன் இங்கு வந்திருப்பது பற்றி மகிழ்ச்சி. பகவான் சைதன்யரின் அருள் மொழி களைப் பரப்பும் பெருந்தொண்டில் ஈடுபடலாமே என்று கூறினார்.

''வெள்ளையனே வெளியேறு' என்னும் காந்திஜியின் அறை கூவலே நாடு முழுதும் எதிரொலிக்கின்ற இந்நாட்களில் சைதன் யரின் அருளுரையை யார் கேட்பர்? விடுதலை பெற வேண்டிய நாம் நமது மண்ணிலேயே அடிமைகளாக நலிந்து கிடக்கிறோம். ஆட்சியைக் கைப் பற்றுவதை விடுத்து ஆன்மீகம் பேசுவதற்கு இதுவா தருணம்?''- கதர்ச்சட்டை அணிந்த இளைஞனின் கேள்வி இது.

ஆன்மீகப் பற்றை விட அந்த கல்லூரி மாணவனது வினா விடையில் அரசியல் வேகமே அதிகம் இருந்தது. பக்தி சித்தாந்தர் தன் முன்னே அமர்ந்திருந்த இருவரையும் ஆழ்ந்து நோக்கினார். அவர் சொல்லப்போகும் பதில் அந்த இளைஞர்களைத் திருப்திப் படுகின்ற சரியான பதிலாக இருக்க வேண்டும். இல்லையானால் தோல்வி அவருக்கு அல்ல, ஆன்மீகத்துக்கே அல்லவா! ஆர்ப் பாட்டம் மிகுந்த அரசியலில் சிக்கியுள்ள உயிர்த்துடிப்புள்ள அவர் களைத் தன் வயப்படுத்தவில்லையாயின், சைதன்ய மகாப்பிரபுவின் கொள்கை விளக்கப்பிரச்சாரத்துக்கு ஒரு பெரும் தடையாகி விடுமே! இந்தச் சிந்தனை ஒரு மணித்துளி தான்; கணீரென்ற குரலில் பக்தி சித்தாந்தர் பதிலிறுத்தார்.

''நிரந்தரம் இல்லாது தோன்றி மறையும் அரசுகளோ மனிதன் உண்டு பண்ணிய எந்த அரசியல் அமைப்புமோ உலகைக் காப்பாற்ற முடியாது வீடு பேற்றிற்கு வழிகாட்டும் இறையுணர்வு விடுதலைப் பேற்றிற்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டிய தில்லை. கண்ணன் காட்டிய வழியே இந்த உலகத்தைக் கரை சேர்க்க முடியும்.''

இளமைக் காலத்திலிருந்தே கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டிருந்த இளைஞன் ஆபே சரனது உள்ளத்தில் இந்த வித்தியாசமான பதில் தனது வேலையைச் செய்யத் துவங்கி விட்டது. தொடர்ந்து அவர்களுக்கிடையில் இரண்டு மணி நேர உரையாடல் நிகழ்ந்தது. பக்தி சித்தாந்தரின் கரை கடந்த இறையுணர்வும், தங்கு தடையின்றி அவரிடமிருந்து வெளியிப்பட்ட கீதை, வேதங்கள், உபநிடதங்களின் மேற்கோள்களும் ஆபே சரனை முழுவதும் மாற்றி விட்டன. தன்னை மறந்த நிலையில் வீடு நோக்கி வந்தார். அரசியல் ஆர்வம் மங்கிவிட்டது.

சித்தாந்த சரஸ்வதியோடு ஆன்மீகத்தில் சேர்ந்து விடலாம், குடும்ப பாரம் குறுக்கே நிற்கிறது. குடும்பத்தைத் துறந்து விடுதலோ இப்போதைய நிலையில் நியாயம் அற்றது. - இப்படி ஓடியது சிந்தனை,

இந்த மன மாற்றத்தின் விளைவாக ஆபே சரன் கல்கத்தாவில் இருந்த கௌடிய மடத்துக்குச் சென்று ஆன்மீக விசாரத்தில் ஈடுபடும் அன்றாடத் தொண்டராகி விட்டார். ஆங்கிருந்த இறை பணியாளர்களும் பிறரும் ஆன்மீகத் தொடர்பான வேதாந்த நூல்களையும், வைணவ இலக்கியங்களையும் அன்புடன் அளித்து ஆபே சரனைப் படிக்குமாறு தூண்டினர். மடத்துத் தலைவராக இருந்த பக்திசித்தாந்தர் சைதன்யரின் மரபு வழியில் வந்தவர். அவருடைய தந்தையார் பக்தி வினோதர் அரசுப்பணியில் உயர் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். சைதன்ய மகாப்பிரபு பற்றி நூல்கள் எழுதியவர். அவரையொட்டி வைணவப்பணி புரிந்த பக்தி சித்தாந்தரும் 'எல்லா மதங்களுக்கும் அப்பால் ஏகனாயும் இறைவனாயும் நின்று உலகைக் காப்பவன் கண்ணன்; அவனது புகழைப் பாடினால் இம்மையில் மனநிம்மதியும் மறுமையில் வீடு பேறும் கிட்டும்' என்று பிரச்சாரம் செய்து வந்தார். "கண்ணன் இசைத்த வேய்ங்குழல் நாதம் செடியும் கொடியும் மாவும் மனிதருமாகிய அனைத்துயிர்களையும் மெய்ம்மறக்கச் செய்தது. அந்தக் கண்ணனின் நாமத்தையே நாம் இசைத்தால், கலியுகத்தின் தீவினைகளிலிருந்து விடுபடலாம் என்றும் போதித்து வந்தார்.

அமெரிக்காவிலும் சென்று பெரும்புகழ் ஈட்டிய பிரபுபாதரின் இயக்கத்திற்கு 'ஹரே கிருஷ்ண இயக்கம் என்று பெயர்

வருதற்குக் காரணமான மகாமந்திரத்தையும் முதன்முதல் உச்சாடனம் செய்து காட்டியவரும் பக்தி சித்தாந்தரே ஆவர்.

ஹரே கிருஷ்ண ! ஹரேகிருஷ்ண ! கி ரு ஷ் ண ஹ ரே ரே! கிருஷ்ண ஹரே! ஆபே ரசன் கௌடிய மடத்துத் தொண்டராகிய நிலைமை குடும்ப வாழ்வைக் குலைத்துவிடவில்லை. உலகியலும், ஆன்மீகமும் ஆபே சரன் வாழ்க்கையில் இணை கோடுகளாகச் சென்று கொண்டிருந்தன, ஏழெட்டாண்டுகள் இந்த நிலைமையே நீடித்தது.

தான் மேற்கொண்டிருந்த உத்தியோகத்தை முன்னிட்டு 1932-ஆம் ஆண்டு ஆபே சரன் அலகாபாத் செல்ல நேரிட்டது. பிரயாகை எனப்படும் இப்பெரிய நகரம் கங்கையும் யமுனையும் ஆகிய ஜீவநதிகள் கூடுகின்ற புண்ணிய பூமியாகும். இமய முதல் குமரி வரையிலான இந்தியப் பெரு நிலத்தின் கோடிக்கணக்கான மக்கள் ஆண்டு தோறும் வந்து போகும் அரிய நகரம் அது. பழுத்த தெய்வ நம்பிக்கை கொண்ட ஆபே சரனுக்கு அந்தப் புனித நகரத்தில் பணி புரியும் வாய்ப்புக் கிட்டியதால் குடும்பத்தையும் கூடவே அழைத்துச் சென்றிருந்தார். ஒரு சமயம் இங்கு வந்திருந்த பக்தி சித்தாந்தரே ஆபே சரனுக்கு வைணவ தீக்கை செய்து வைத்தார். இதற்குப் பிறகு முப்பது ஆண்டு காலம் தன்னுடைய குருவின் கட்டளைப்படி கிருஷ்ணாய இயக்கத்தைத் தன்னந்தனியனாக நடத்திய பெருமை பிரபுபாதரைச்சாரும்.

கிருஷ்ண நாமத்தைக் கூறி பஜனைகள், வழிபாடுகள் சொற்பொழிவுகள் செய்யும் தெய்வீகத் தொண்டுக்கு குடும்ப வாழ்வு கொஞ்சம் இடையூறாகத் தான் இருந்தது. பிரபுபாதரின் மனைவியும் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர் தான். ஆயினும் தனது கணவன் வெளியில் சென்று தொடர்ந்து பிரச்சாரம் செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. சிற்சில நாட்களில் பஜனைக் கூட்டத்தை வீட்டின் முன் கூடத்திலேயே வைத்து விடும்போது, அவரது மனைவியார் மாடிக்குச் சென்று விடுவார். கணவனோடு விவாதம் செய்து சண்டை போடாமல் அவரே ஒதுங்கிவிடுவார்.

அலகாபாத்தில் இருந்த போது மருத்துவக் கம்பெனியின் பிரதிநிதியாக ஆபே சரன் வட இந்தியாவின் பல்வேறிடங்களுக்கும்

பயணம் செய்யவேண்டியிருந்தது. அதனைப்பற்றி கவலைப்படாமல் அலைந்தும் திரிந்தும் ஈட்டிய பணத்தை ஆன்மீக வழியில் செல விடும் எண்ணமே இவருக்கு மிக்கிருந்தது. நான்காண்டுகளுக்கு மேலாக அலகாபாத் நகரில் குடியிருந்தார். வணிகத் தொடர்பாக ஐந்தாறு தடவைகள் கல்கத்தா நகருக்கு வந்தபோது தன்னுடைய குருவாகிய பக்தி சித்தாந்தரைப் பார்க்கத் தவறவில்லை. சித்தாந்தரின் சீடர்கள் தமது குருவிடம் நெருங்கிப் பேசவும், பழகவும் அஞ்சி ஒதுங்கி இருப்பதே வழக்கம். பிரபுபாதர் அப்படி யொன்றும் சம்பிரதாய முறையில் பழகுவதில்லை. 'எனது குருநாதர் என்னிடம் காட்டும் அன்புக்கு இணையில்லை' என்று சொல்லி மகிழ்வதே பிரபுபாதரின்வழக்கம். குருநாதரைப் பார்த்து வணங்கி அருகிருந்து தாராளமாகவே பேசிப்பழக்கப்பட்டவர் இவர்.

1935-ஆம் ஆண்டில் பக்தி சித்தாந்தரின் 62- ஆவது பிறந்த நாளை கௌடிய மடத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். பிரபுபாதர் குருபக்தியின் அடையாளமாக ஒரு பாடலும் கட்டுரை யும் ஆங்கிலத்தில் எழுதி சமர்ப்பித்தார். கௌடிய மடத்திலிருந்து வெளியாகும் இதழான 'ஹார்மொனிஸ்ட்' எனும் மாத இதழில் வெளியிடும் தகுதி உடையதென்று அவைகளைத் தேர்ந்தெடுத் துக் கொண்டனர். பக்திசித்தாந்தரும் பிரபுபாதர் எழுதிய பாட லைப் படித்துப்பார்த்தார்.

தனது சீடன் தன்னைப்பற்றி எழுதிய அனைத்துள்ளும் தானே விரும்பிப் படித்து மனதுக்குள் மகிழ்ந்து வாய்விட்டுப் பாராட்டிய பகுதி இதுதான்;

தன்னையே உணர்ந்த தனிமுதல்வன்
நீயன்றோ !
தாரணியின் தொல்லை தன்னைத்
தள்ளி வைத்த மாயனன்றோ !

தன்னுடைய குருதேவரின் தொண்டு உள்ளத்தை இந்த சிறிய பாடற் பகுதியுள் அடக்கிய திறமையை அனைவரும் பாராட்டினர்.

1935-ஆம் ஆண்டு ஒரு நாள் மாலை நேரம். கௌடிய மடத்துக்கு அருகில் ராதாகுளம் எனும் அழகிய ஏரி ஒன்று

உண்டு. மாலை நேரங்களில் பக்தி சித்தாந்தர் அந்த ஏரிக்கரை-யில் நடந்து செல்வது உண்டு. அந்த நேரத்தில் திருமடத்தில் இருக்கும் இளந்துறவியர் சிலரும் அவருடன் கூடச் செல்வர். குறிப்பிட்ட ஒரு நாளில் பக்திசித்தாந்தரோடு ஆபே சரனும் கூடச் சென்றார். தாம் இல்லறத்தானாக இருந்தாலும், பக்தி சித்தாந்-தர் மீது ஏற்பட்ட அன்பினால் தன்னுடைய ஆன்மீகப் பற்றையும், மடத்துத் தொடர்பையும் ஆபே சரன் துண்டித்துக் கொண்ட-தில்லை. எனவே தான் அன்று மாலை பக்தி சித்தாந்தர் சற்றே உளம் விட்டுப் பேசினார்.

“இங்கு இருக்கும் மூத்த துறவியர் சிலர் மடத்திலே உரிமைகளுக்கும் வசதிகளுக்கும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளுகின்றனர். என்னுடைய காலத்திற்குப் பின்னர் மடத்தினுடைய கொள்கைகளும் பணியும் எவ்வகையில் நிறைவேற்றப்படுமோ என்று கவலையுறுகிறேன்” ஆபே சரனுக்கு இதற்கு எப்படிப் பதில் கூறுவதென்றே தெரிய-வில்லை. பதினோறு ஆண்டுகளாக பக்தி சித்தாந்தரோடு தொடர்பு உண்டு. ஆன்ம விசாரத்தோடு வைணவ இலக்கியங்கள் பற்றியும் வரும்போதெல்லாம் உரையாடிச் செல்வது பழக்கம். மடத்து நிர்-வாகம் பற்றி ஒன்றும் தெரியாது. இருப்பினும் தன்னுடைய குரு நாதருடைய கவலையில் பங்கு கொள்ளும் முறையில் பேசினார்.

“நான் செய்ய வேண்டிய பணி ஏதேனும் இருப்பின் எனக்கு அதனைக் கூறுங்கள். இருகரங் கூப்பி இட்டதைச் செய்கிறேன்” பக்தி சித்தாந்தர் மனம் நெகிழ்ந்து போனார்”. பொருள் வசதி கிடைக்கும்போது தெய்வீக இலக்கியங்களை ஆங்கிலத்தில் அச்-சிட்டு வெளியிட வேண்டும். அதற்கு வேண்டிய திறமை உன்னிடம் உள்ளதென்றே நாம் உறுதியாக நம்புகிறேன்”. 1921-இல் மாணவனாக இருந்த போது முதன் முதலாகச் சொன்ன இந்த வேண்டுகோளை பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும், வற்புறுத்திச் சொல்கிறாரே என்று எண்ணிய ஆபே சரன், நிச்சய-மாக இந்தப் பணியைச் செய்வேன் என்று உறுதி கூறினார்.

மனித குலத்தையே முற்றும் அழித்துவிடக்கூடிய போர்க் கருவிகளை பெருக்கிக் கொண்டிருக்கும் பற்பல நாடுகளை பலம் பொருந்தியவை என்கிறோம். இந்நிலையில் இந்திய நாட்டிற்குள்ள பெருமையெல்லாம் அதனது ஆன்மீக பலம்தான். இப்பேருண்மையை அகில முழுதும் பரப்புதற்கு ஆங்கிலப் பெயர்ப்பு தேவை என்றே அவர்கள் எண்ணினர். (தொடரும்)

நூல் மதிப்புரை

நூலின் பெயர் : ஸ்ரீ ரமண வழி
ஆசிரியர் : ஸ்ரீ சாது ஓம்
வெளியீடு : அருணாசல ரமண நிலையம்

மணக்குள விநாயகர் தெரு,
திருவண்ணாமலை—3

விலை : ரு 36/-

மறுமையின் புண்ணியமெனத் தகும் நித்தியானந்தப் பெருவாழ்வை இம்மையிலேயே அடைதல் கூடும் என்னும் அத்துவித நிலைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவரே பகவான் அருணாசல ரமணர். ஆரவாரமான ஆன்மீகப் பிரச்சாரம் ஏதுமின்றி அடக்கமான தெய்வநெறிக் கொள்கையின் வழி மனோநிம்மதியை உலகுக்கு உணர்த்தியவர். தன்னை நாடி வந்து தட்டியோருக்கு அருட்கதவைத் திறந்த ஆன்மீக வள்ளல். உபதேச உந்தியார், ஏகான்ம பஞ்சகம், உள்ளது நாற்பது போன்ற சில மூல நூல்கள் பகவான் ரமணர் தாமே தமிழில் இயற்றியவையாகும். அவைகளைத் திரிவுபட உணர்ந்தாரும், முழுமையும் தெரியாது மயங்கினாரும் தெளிவு பெறுகின்ற முறையில் சாது ஓம் சுவாமிகளால் ஸ்ரீரமண வழி எனும் உரைநடை விளக்க நூல் எழுதப்பட்டுள்ளது, ரமணோபதேசங்களையே தமது வாழ்வின் அருனெறியாக ஏற்றுக் கொண்ட சாது சுவாமிகள் எழுதியதே இப்பனுவல். ஏதோ சில மூல நூல்களின் விளக்கம் என்று சொல்வதை விட ரமண பகவானின் இன்றியமையாத அருள் வாக்கினைத் தெளிவுபடுத்தும் ஆன்மீகச் சுடரெனவே இந் நூலைக் கொள்ளுதல் வேண்டும்.

வெவ்வேறு காலங்களில் வெளியிடப் பெற்ற இரண்டு பாகங்களும் ஒரு சேரப் பெற்ற இத்திருந்திய பதிப்பின் முற் பகுதியிலேயே முப்பது பக்க அளவில் ரமண மகரிஷியின் வரலாறு தெளிவாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. பதினாறு வயது இளைஞனாக இருக்கும் போது மரணத்தைப் பற்றி அவர்

அடைந்த அனுபவபூர்வமான உண்மை மிகவும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. 'நான்' வேறு,'உடல்' வேறு என்று இளமைக் காலத்திலேயே மகரிஷிக்குக் கிடைத்த அரிய அனுபவம் யாவர்க்கும் கிடைக்கக் கூடியதல்ல. எனவே தான் மகரிஷியின் அருள் வாக்குகளையாவது இவ்வுலகம் அறிந்தும் உணர்ந்தும் உய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூல் வெளியாகி உள்ளது.

வேங்கடராமனர்கத் திருவண்ணாமலைக்கு வந்து கோவணாண்டியாகி. உடல் துன்பத்தையும் பொருட்படுத்தாது நிட்டையில் அமர்ந்து பகவான் அருள்நிலை பெற்ற இடமே பாதாள லிங்கக் குகையாகும். மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் பகவான் பரம பக்தையாக இருந்த பார்சி மதத்தைச் சார்ந்த திருமதி. தலையார்கான் அந்தப் பாதாள லிங்கக் குகையினைப் புனருத்தாரணம் செய்தது பின்னாளைய வரலாறு.

சாதாரண மக்களும் புரிந்து கொள்ளுமாறு ஆன்மார்த்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

—தன்னை

உணர்ந்து தானாதல் உலக சஞ்சாரக்

கனவின் விழித்தலே காண்' என்ற பகுதிக்குரிய விளக்கமே இதற்குச் சான்று. 'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்ற வள்ளுவம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பல்வேறிடங்களில் கதைகளும், உண்மை நிகழ்ச்சிகளும் பொதிந்து இத்தத்துவ விளக்க நூல் மிகவும் சிறப்புற அமைந்துள்ளது. நூலகங்களிலும் ஆன்மீக நிலையங்களிலும் வாங்கிப் பயிலுதற்குரிய இந்நூல் தெய்வீகப்பிரச்சாரம் செய்வோர்க்கும் பெருந்துணை புரிய வல்லதாகும்.

—திரையன்.

தவத்தை விட்டு வெளியே வா

ப. முத்துசாமி.

மந்திரங்கள் முணுமுணுத்துப் பாட்டுப் பாடி
    மணியுருட்டும் வேலையெல்லாம் விட்டு வாவா,
அந்தவிருட் கோயிலிலே கதவை மூடி
    ஆரையங்குத் தொழுகின்றாய் தனித்து நின்றே.
முந்தியுன்றன் கண்திறந்து முன்னே காண்பாய்
    முழுமுதல்வன் உன்னிறைவன் அங்கே யில்லை.

கருந்தரையில் உழுகின்றான் அருகி லுள்ளான்
    கல்லுடைத்துச் சாலையமைத் திடுவோன் தோழன்
சுடுங்கதிரில் மழையினிலே சுழன்று ழைப்போர்
    சோர்வறியாப் பணியினிடைச் சுற்று கின்றான்
உடுந்துணிகள் தூசுபடிந் தழுக்க டைந்தே
    உருக்குலைந்து கிடக்கின்றான் இறைவன் தானே
நெடும்புனித அங்கிகளைத் தெரிந்து விட்டே
    நிமலனைப் போல் புழுதிகொண்ட நிலத்தில் வாவா.

வீடுபேறு மோட்சமென்று தேடுகின்றாய்
    விடுதலையை எங்கடையப் போகின் றாயோ
தேடும்நும துயர் தலைவன் படைப்பென் னும்மோர்
    தீராத கட்டினுக்குள் கிடந்து சிக்கி
ஊடாடிக் கொண்டுள்ளான் நம்மி லொன்றாய்
    உறவாடி என்றென்றும் கட்டுண் டானே
தவங் களெலாம் விட்டுவிட்டு வெளியே வாவா

    சார்ந்து நிற்கும் பூவினொடு புகையை விட்டுத்
துவங்குக நீபுது வாழ்வு நின்ற னாடை
    துவண்டழுக்குப் பட்டுவிட்டால் கெடுதி யென்ன
நகங்களிலே அழுக்கடைந்து நெற்றி வேர்வை
    நானிலத்தில் உதிர்த்துன்றன் உழைப்பைத் தந்தே
உவந்து நின்றன் இறைவனைத்தான் அங்கு கண்டே
    உறவாடி அவனருளைப் பெறுக மாதோ;

— கீதாஞ்சலியிலிருந்து
தமிழாக்கம்,

நூல் மதிப்புரை

நூல்: உரைமரபுகள்
ஆசிரியர்கள்: டாக்டர். இரா. மோகன்
டாக்டர். ந.சொக்கலிங்கம்
வெளியீடு : மணிவாசகர் நூலகம்

விழுமிய கருத்துக்களைப் பழுதற உரைக்கும் பாங்கு பண்டைத் தமிழரிடத்தே காணும் அரிய உண்மையாகும். சொற் சுருக்கமும், ஆழ்ந்தகன்ற பொருண்மையும் இயற்கை நலம் கனியப் பாவி யற்றும் ஏற்றமும் அவர்தம் பிற இயல்புகளாம். திணிவும் செறி வும் கலந்த பாவினைப் பிரித்தும் பொழித்தும் தெளிவுபடுத்தி பண்டிதருக்கும் பாமரருக்கும் இணைப்புப்பாலம் கட்டியவர்களே உரையாசிரியர்கள். மொழிநடையின் உயர்விலே பண்டிதர்கள் முற்றுமாக ஒதுங்கி விடாது அவர் தமது ஈடும் எடுப்புமற்ற இலக்கியச் செல்வங்களை யாவரும் துய்க்க வழி செய்த இவருள் முதல்வராகக் கருதப்படுவர் இளம்பூரணர். அவரோடு இன்னும் எண்மரையும் சேர்த்து ஒன்பது உரையாசிரியர்களைப் பற்றிய வாழ்வு, வரலாறு, உரை நுட்பம் ஆகியனவற்றை நிரல்படக் கூறு வதே இந்நூலாகும் இந்த அரிய முயற்சியில் ஈடுபட்ட இந் நூலாசிரியர்களின் முயற்சி பல்காலும் பாராட்டத்தக்கதாகும்.

உரையின் தோற்றம் பற்றிய கட்டுரையில் 'நூலுக்கு உரை எழுதும் பழக்கம் சங்க காலத்தில் இல்லை' என்னும் குறிப்பு காணப்படுகிறது. ஆயின் அக்கால மக்கள் உரையின்றியே படிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனரா? இல்லையாயின் மிகச் சிறந்த பனுவல்களையும், சமுதாயத்துக்குரிய மேல்வரிச் சட்ட மெனக் கொள்ளத்தகும் பற்பல நூல்களையும் எழுதியோர் தமது சமகால மக்களை மனதிற் கொண்டிலரா என்பன போன்ற வினாக்களை எழுப்பி விடைகாண முயற்சி செய்திருக்கலாம். நக்கீரர் பற்றிய கட்டுரையில் நன்னூலாரின் பொருள்கோள் எட்டு என்று குறிப்பிட்டதோடமையாது நக்கீரர் கூறுவனவையும் ஒப்பிட்டு நக்கீரரிடம் வேறுபட்டு அமைவனவற்றை விளக்கியிருக் கலாம். இளம்பூரணர் குறிப்பிட்ட சில சொற்பொருட்களை வரிசைப் படுத்தும்போது 'நடுவுநிலையாவது ஒரு மருங்கு ஓடாது நிகழும் மனநிகழ்ச்சி' என்னும் வாக்கியம் எடுத்துக்காட்டப்படுகிறது.

பிறிதோரிடத்தில் 'செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடாத நடுநிலை' என்று இளம்பூரணரே கூறுவது ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

தனக்கு முந்திய காலத்தவராகக் கருதப்படும் மணக் குடவர் போன்ற பிறரது உரையினைப் பரிமேலழகர் மறுத்த இடங்களாகச் சில சான்றுகள் காட்டப்படுகின்றன. ஆயின் அதற்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டத் தகுவதாய ச. தண்டபாணி தேசிகரின் உரைவளத்தினை நூலாசிரியர் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. உரையாசிரியர்கள் பற்றி அபிதான சிந்தாமணி தருகின்ற சிறந்த பல கருத்துக்களையும் இக்கட்டுரைகளில் சேர்த்திருக்கலாம். 'பேராண்மை'க்குப் பரிமேலழகர் தரும் விளக்கத்தைக் கூறி விட்டு, அதே குறளில் அச்சொல்லை விட அதிகப் புழக்கத்தில் இல்லாததும், அரிய சொல்லுமான 'ஊராண்மை' என்ற சொல்லுக்கும் அவர் குறிப்பிட்ட பொருள் ஏன் விடப்பட்டது என்று தெரியவில்லை. குறள் 662-க்குப் பரிமேலழகர் கூறும் உரை வள்ளுவருக்கு அணி செய்வதாக விளங்குகிறது. பெரியவாச்சான் பிள்ளை பற்றிய கட்டுரை சிறப்புற அமைந்துள்ளது.

நூலை முற்றுமாகப் படிக்குமிடத்து எமக்கு ஏற்படும் ஒரு கருத்தைச் சொல்லித்தான் ஆகவேண்டும். பற்பல உரையாசிரியர் களின் உரைகளை ஆழ்ந்து படிப்பதை விட்டு அவர் தம்மைக் குறித்துப் பற்பல தமிழறிஞர்களின் கருத்துக்களைத் தொகுப்பதி லேயே இந்நூலாசிரியர்கள் கவனமாக இருந்துள்ளனர் என்று தோன்றுகிறது. இருப்பினும் கடுமையான உழைப்பின் மூலம் உருவாகிய இம்முயற்சி பல்காலும் பாராட்டத்தக்கது.

உரைமரபுகள் என்னும் தலைப்பிடப்பட்ட இந்நூலில் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே வாழ்ந்தோராகக் கருதப்படும் உரையாசிரியர்களைப் பற்றி ஆய்ந்து எழுதும் போது இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒருவரையும் இணைத்திருப்பது பொருத்தமாகப்பட்டிலது. கட்டுரையின் முறை வைப்பில் இக்காலப் பிறழ்வைத் தவிர்த்திருக்கலாம். ஆய்வாளர்கட்கும் பட்டப் படிப்பு மாணவர்கட்கும் இது அரிய வழிகாட்டி நூல் என்பதில் ஐயமில்லை. இந்நூலைப் போன்றே பிற்றை நாள் உரையாசிரியர் களைப் பற்றியும் எழுதி வெளியிடல் சாலப் பொருத்தமாக அமையும்.

சிலம்பில் மகளிர் வருணனைகளில் உவமைகள் :

ஈ. அன்னக்கிளி, எம்.ஏ., எம்.பில்
கேரளப்பல்கலைக் கழகம்,

சிலப்பதிகாரப் பெண்பாத்திர வருணனைகளில் இளங்கோவடிகள் பயன்படுத்துகிற உவமைகள் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகின்றன. 1. உவமிக்கப்படும் பொருட்கள் 2. உவமைகளை அமைக்கும் பாங்கு. 3. உவமைகளில் பயன்படுத்தும் அடைச்சொற்கள் 4. பாத்திரத்திற்கேற்ற உவமைகளைக் கையாளும் விதம். 5. நிகழ்ச்சிகளுக்குத் தகுந்தவாறு உவமைகள் அமைதல். 6. உவமைகள் கையாளுவதில் காணும் தனித்தன்மைகள் ஆகிய நிலைகளில் ஆய்வு அமைகின்றது. உருவகங்களும் உவமையின் பாற் பட்டதால் அவையும் உவமைகளுடன் இணைத்தே ஆயப்படுகின்றன.

மகளிர் வருணனையில் சிலம்பில் 223 உவமைகள் இடம் பெறுகின்றன. அவற்றுள் கண்ணகியைப் பற்றி 77 உவமைகளும், மாதவியைப் பற்றி 59 உவமைகளும் அமைகின்றன. ஏனைய பிற மகளிரைப் பற்றி அமைவன.

கண்ணகி, மாதவி, இடைக்குல மகளிர், கடைசியர், குறமகளிர், தேவந்தி, மணிமேகலை, வசந்தமாலை ஆகிய மானிட மகளிரும், இயக்கி, சாலினி, திருமகள், நப்பின்னை, வள்ளி, வனசாரிணி ஆகிய தெய்வமகளிரும் இவ்வருணனையில் இடம் பெறுகின்றனர்.

1. உவமிக்கப்படும் பொருட்கள் :

உறுப்புக்களை வருணிக்கும்போது இயற்கைப் பொருட்களை உவமைகளாகக் கையாளும் பாங்கு சிலம்பில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

மலர், மீன், அணிகலன், விண்மீன், பறவை, விலங்கு புலனுகர் பொருள் ஆகியன உவமைகளாகக் கையாளப்படுகின்றன.

எ.கா. மலர்: 'குவளை' (23:2-3)......

2. உவமைகளை அமைக்கும் பாங்கு:-

கண்ணகி வருணனையில் உவமைகளின் ஆட்சி மனையறம் படுத்தகாதையிலும், மாதவி வருணனையில் உவமைகளின் ஆட்சி

வேனிற்காதையிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

உவமைகளை ஒரு சில இடங்களில் தொடர்பு கருதி கூறி இருந்தாலும், ஒரு உவமையை ஓரிரு அடிகளில் வரையறுக்கும் பாங்கும் பொருந்துகிறது. பொதுவாக நீண்ட உவமைகளை ஆசிரியர் கையாளவில்லை.

தொடர் உவமைகள் முக்கியப் பாத்திரங்களாகிய கண்ணகி, மாதவி ஆகிய இருவரின் அழகு வருணனைகளில் இடம் பெறு-கின்றன.

மனையறம்படுத்த காதையில் கண்ணகியைக் கோவலன் வருணிக்கும் 4 வித அமைப்புக்கள் காணப்படுகின்றன.

"குழவித் திங்க ளிமையவ ரேத்த
அழகொடு முடித்த வருமைத் தாயினும்
உரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையின்
பெரியோன் றருக திருநுத லாகென" (2 : 38 - 48)

என நுதலை உவமிப்பது போலவே, அடிகள் புருவம், இடை, ஆகியவற்றையும் உவமித்துள்ளார்.
கண்ணை வருணிக்கும் போது,

"அறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியும்
இறுமுறை காணு மியல்பினி னன்றே
அஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா வீத்தது" (2 : 49 - 52)

எனப் பாராட்டியுள்ளார்.

கண்ணகியின் நுதல், புருவம், இடை ஆகியவற்றின் உவமைகளாக இறையோன், காமன், இந்திரன் என்னுமிவர்களின் பிறை, கரும்பு, வச்சிரம் முதலியவற்றை எடுத்தாண்டுள்ளார். இங்கு பொருளைவிட உவமையைப் புகழ்ந்து பேசுகின்றமையால் புகழு-வமை எனலாம்.

இதை அடுத்து 7 அடிகளில் சாயல், நடை, மழலை ஆகியவற்றை வருணிக்கும்போது, 'மயில்கள் சாயலுக்குத் தோற்று காட்டிடத்தே போய் அடையவும், அன்னம் நடைக்குத் தோற்று வயல்களிற் செறிந்த மலரிடத்தே புகுந்து மறையவும், கிளிகள் மழலைச் சொல்லுக்குத் தோற்று அச்சொல்லினைக்

கற்கக் கருதி கையிலிருந்து நீங்காது தங்கின'[1] என விளக்கம் கூறுகின்றார். ந.மு வேங்கடசாமி நாட்டார்.

அடுத்து வரும் மூன்று அடிகளான

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!" (2: 78-75)

என்பனவற்றில் உவமையை விளியாக்கி (ஆகுபெயர் நிலையில்) அடுக்கித் தந்துள்ளார். இவற்றாற் சொல்லியது ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையுமாகலின் "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணேயுள" (குறள்-1101) என நலம்பாராட்டப்பட்டன என்பது அடியார்க்கு நல்லார் கருத்து. அடுத்த மூன்று அடிகளில்,

"மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!" (2:77-79)

என மலையிடைப் பிறக்கும் மணி குழையாமையின் அதிற்பிறவா மணியே யென்பேனோ! அலையிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற் பிறவாத அமுதே யென்பேனோ! யாழ்கட்கு இன்னதாகலின் அதனிடைப் பிறவாத இசையே யென் பேனோ! எனத் தெரிதரு தேற்றவுவமை யென்னு மலங்காரமும் புலப்படுத்தினார்.

3. உவமைகளில் பயன்படுத்தும் அடைச்சொற்கள்:

சிலம்பில் உவமிக்கும் பொருளுக்கும், உவமிக்கப்படும் பொரு-ளுக்கும் அடைமொழிகள் பயின்று வந்துள்ளன.

"மாமலர் நெடுங்கண்' (8:16, 8:18, 8:118, 8;170, 13:48) இணைமலர்ச் சீறடி' (12:45), 'கருங்கயல் நெடுங்கண்' (16:3) 'மாமலர் நெடுங்கண்' என்பதில் மலருக்கு 'ம' வும், கண்ணுக்கு 'நெடு' வும் அடையாக அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வகை

[1] சிலப்பதிகாரம் - ந.மு. வேங்கடசாமிநாட்டார் உரை. 1956. ப.40.

அமைப்பு ஒரு சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. 'கருங்கயல்' (5:205), 'மட அன்னம்' (8:86) என்ற அடையடுத்த உவமைகள் பயின்றடைகின்றன.

4 பாத்திரத்திற்கேற்ப உவமைகளைக் கையாளும் விதம் :

ஒரு பாத்திரத்தின் தொழில், பண்பு ஆகியவற்றிற்கேற்ப அவர்களை வருணிக்கும்போது இக்குணங்களை மெருகூட்டும் விதத்தில் உவமைகளும் அமைந்துவிடுகின்றன.

மாதவி கணிகை குலத்து மகள் ஆதலால் அவள் ஆடலுக்குத் தகுந்தவாறு ஒப்பனை செய்திருந்தாள்.

கதைப் போக்கில் மாதவியை வருணிக்கும்போது 'வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம், கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம், வாங்குவில் வயிரத்து மரகதத்தாள் செறி, காந்தள் மெல்விரல் கரப்ப வணிந்து''(8:95-98)என அணிகலன்கள் அணிந்த உறுப்புக்கள் உவமைப்படுத்தப்படுகின்றன. ஆனால் அணிகலன் அணியாது இயற்கை அழகுடன் விளங்கிய கண்ணகியையே ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

'செந்தளிர்' (13:24), 'நறுமலர்' (14:18) ஆகியன கண்ணகி மேனியையும், 'மாந்தளிர்' (15:22),' 'பீர்க்கமலர்' (7:38:3) ஆகியன மாதவி மேனியையும் உவமிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. மாதவி மேனியைப் பசலைப் படர்ந்ததாகக் கூறி இருக்கின்றாரேயொழிய கண்ணகி மேனியை அவ்வாறு கூறவில்லை. இதனின்றும் ஆசிரியர் உவமைகளைக் கையாளும்போது பாத்திரங்களை வேறுபடுத்திக் காட்டும் நிலை புலனாகிறது.

5. நிகழ்ச்சிகளுக்குத் தகுந்தவாறு உவமைகள் அமைதல்:

ஒரே உவமையின் மூலம் இருபாத்திரங்களின் இருவேறு நிலைகளைக் காட்டுகின்றார் ஆசிரியர்.

> "கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
> கண்ணகி கருங்கணு மாதவி செங்கணு
> முண்ணிறை கரந்தகத் தொளித்து நீருகுத்தன"
>
> (5:236-38)

கழுநீர்மலர் தேன் நிறைந்து சிந்துதல் இருவர் கண்களும் நீர் சொரிதலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது. எனினும் இருவரின் நிலையும் வெவ்வேறானவை. கண்ணகி கோவலனைப் பிரிந்த நிலையில் கண்ணகியின் கண்கள் அழுகையின் கண்ணீர் சிந்துவனவாகவும், கோவலனைப் பெற்ற மாதவியின் கண்கள் உவகைக் கண்ணீரைச் சிந்துவனவாகவும் குறிப்பாகச் சுட்டுகின்றார்.

6. இளங்கோவடிகள் தனித்தன்மை:

இளங்கோவடிகள் உவமையின் வடிவத்தையே மாற்றித் தந்திருக்கின்றார். இடத்திற்கு, பாத்திரங்களுக்கு,காதைகளுக்குத் தகுந்தவாறு உவமைகளைப் பொருத்தமாக அமைத்துள்ளார்.

கானல்வரியில் மாதவியைப் பாராட்டிக் கோவலன் கூறுவது அவளுடைய குலத்திற்கு ஏற்பவே அமைவதைக் காணலாம்.

''கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்''
(7:11:1-2)

எனக் கண், புருவம், கூந்தல் ஆகியவற்றின் கவர்ச்சியைப் பிறருக்கு எடுத்தியம்புவது போல் புனைந்துரைக்கின்றார்.

''தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளையல்ல கொடிய கொடிய'' (7:20:3-4)

என உவமைப் பொருளை மேன்மைப்படுத்திக் கூறுவதோடு உவமிக்கப்படும் பொருளுக்கு ஒப்பில்லை என்று கூறுவதாக அமைக்கின்றார். மாதவியின் அழகிய கண் கோவலனைக் கவர்ந்தது. எனவே உயிரைக் கொண்டு செல்லும் கூற்றுவனாகக் கூறுகின்றான் கோவலன்.

சில இடங்களில்,

''சேரல் மடவன்னம் சேரல் நடை ஒவ்வாய்'' (7 : 28 : 1—2) இவை கண்ணகிக்கு ஒப்புமையாக மாட்டா என அமைக்கும் நிலையினையும் காணலாம்.

முடிவுரை :-

பெண்கள் வருணனையில் சங்க இலக்கியத்தில் பொருந்திய

சில மரபுகள் சிலப்பதிகாரத்தில் தொடராமைக் குறிப்பிடத்-தக்கது.

எ.கா. "சாய்க் காட் டன்ன என்நுதல்" (நற். 73)
"தேனூ றன்ன இவள் நலம்" (ஐங். 57)

ஒரு நாட்டுப் பின்புலத்தோடு மகளிரை உவமை செய்யும் பாங்கு காணப்படாமைக் குறிப்பிடத்தக்கது.

எ.கா. "..............கொற்கை முன்றுறைச்
சிறு பாசடைய செப்பூர் நெய்தல்
தெண்ணீர் மலரின் தொலைந்த
கண்" (நற். 23)

உறுப்பு வருணனைகளில் 'கழுத்தைத் தவிர மற்ற எல்லா உறுப்புகளும் இங்கு இடம்பெற்றுள்ளன.

இளங்கோவடிகள் பயன்படுத்துகிற உவமைகள் பெரிதும் மரபு உவமையாக அமைந்திருப்பினும் உவமை வெளியீட்டில் இளங்கோவடிகளின் தேர்ச்சி இலக்கியத் தேர்ச்சி மிக்கது. அடி-யார்க்கு நல்லார் உரைவழி, நாம் சிலப்பதிகாரத்தை அணுகும் போது, இவ் வுவமை வெளியீட்டில் பொருந்தியிருக்கின்ற, வெளி-யீட்டு நுட்பங்களைத் தெரிந்து கொள்கிறோம்.

பிற்கால அலங்காரநூலார் எடுத்து மொழிகின்ற பல்வேறு உவமை வகைகளையும், (புகழுவமை, இல்பொருள், தெரிதரு தேற்றம்) வேறு அணிகள் (விரோதம், பின்வருநிலை) பொருந்தி நிற்கும் பாங்கினையும் அடியார்க்கு நல்லார் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றார்.

துணை நின்ற நூற்கள் :

1. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் — 1968.
2. சிலப்பதிகார மூலமும் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் உரையும் — 1956.

சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத்

தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள்:

1984-85 ஆம் ஆண்டில் உயர்நிலை - மேல்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற அன்பர்களுக்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

10-ஆம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்:

வ. எண்.	மாணவர் பெயர், பள்ளி முகவரி	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1.	ஆ. அபிஷேகவல்லி புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திண்டிவனம்.	181	முதல் பரிசு	100.00

வ. எண்:	மாணவர் பெயர், பள்ளி முகவரி	மதிபபெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
2	வெ. லட்சுமி, கலைமகள் மகளிர் உயர்பள்ளி, ஈரோடு.	180	இரண்டாம் பரிசு	50.00
3.	ஆ. சுபத்ரா, அரசினர் பெண்கள் உயர்பள்ளி, நான்குநேரி.	179	மூன்றாம் பரிசு	25.00
4.	கோ. ஜெயசுதா, கலைமகள் மகளிர் உயர்பள்ளி, ஈரோடு.	178	ஆறுதல் பரிசு	10.00
5.	ஜே. சந்திரசேகர், கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.	177	,,	10.00
6.	பி. முரளிதரன், அரசு ஆண்கள் உயர்பள்ளி, திருமலைராயன் பட்டினம்.	177	,,	10.00
7.	டி. செந்தில் குமார், அமெரிக்கன் கல்லூரி மேல் நிலைப்பள்ளி, மதுரை-2.	17/	,,	10.00
8.	எஸ். மோகன் மங்களராஜ், போப் நினைவு உயர்பள்ளி. சாயர்புரம்.	176	,,	10.00
9.	வி. புஷ்பராணி, கேப்ரன்ஹால் மகளிர் மேல் நிலைப்பள்ளி, மதுரை-10.	176	,,	10.00
10.	பி. ஆறுமுகம் அம்மாள், எஸ்.எம்.எஸ்.எம். மேல்நிலைப் பள்ளி, சுசீந்திரம்,	175	,,	10.00

வ. எண்.	மாணவர் பெயர், பள்ளி முகவரி	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
11.	பி.கே. ஷகிலா, கலியாண சுந்தரம் மேல் நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.	175	,,	10.00
12.	வி.எஸ். வித்யா, என்.எல்.சி. மகளிர் மேல் நிலைப் பள்ளி, நெய்வேலி.	175	,,	10.00
13,	வி. முத்துக்குமார், அரசு ஆண்கள் உயர்பள்ளி, திருமலைராயன் பட்டினம்.	175	,,	10.00
14.	வெ. அன்னபூரணி சிறுமலர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாகமலை, மதுரை-19.	175	,,	10.00
15.	எஸ். ராஜப்ரியா, சாராள் தக்கர் மகளிர் மேல் நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை.	174	,,	10.00
16.	டி. செல்வி, பாலவிநாயகர் உயர்பள்ளி, சிவகிரி.	174	,,	10.00
17.	இரா. உமா திரு. சாரதா வித்தியாலயா, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அழகப்பபுரம், சேலம்-16.	174	,,	10.00
18.	டி. அமீனாபீவி, கலியாண சுந்தரம் மேல் நிலைப் பள்ளி, தஞ்சாவூர்	174	,,	10.00

19.	லெ. புவனஸ்வேரி, மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி, மதுரை.	174.		1000,

மேல் நிலைப்பள்ளி 12-ஆம் வகுப்புத் தமிழ்த்தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

வ. எண்.	மாணவர் பெயர், பள்ளி முகவரி	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1.	டி.எஸ். லலிமாய, சௌராட்டிரா பெண்கள் மேல் நிலைப் பள்ளி, மதுரை-9.	180	முதல் பரிசு	100.00
2.	வி. ஸ்ரீதரன், கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.	178	இரண்டாம் பரிசு	50.00
3.	கதிஜாபானு, மாநகராட்சி மகளிர் மேல் நிலைப் பள்ளி, சொக்கிகுளம், மதுரை-2.	177	மூன்றாம் பரிசு	25.00
4.	ஏ.எஸ். நளினி, சௌராட்டிரா பெண்கள் மேல் நிலைப் பள்ளி, மதுரை-9.	175	ஆறுதல் பரிசு	10.00
5.	எம். கிரிஜா, S.R.N.V. மேல்நிலைப் பள்ளி, இலக்குமி நாயக்கன் பாளையம்,	174	,,	10.00

வ. எண்,	மாணவர் பெயர், பள்ளி முகவரி	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
6.	எ. அன்பரசு, எம்.எஸ்.பி. சோலை நாடார் நினைவு மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.	173	,,	10.00
7.	பி.ஆர். பாலசுப்பிரமணியன், மேற்கு நெல்லை மேல்நிலைப் நல்லூர்.	173	,,	10.00
8.	மு. மீனாட்சி, புனித வளனார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, மதுரை.	173	,,	10.00
9.	டி.ஆர். ரகுராமன், கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.	172	,,	10.00
10.	ப. பொன்ரஜ்சினிஜெயா, எலியட்டக்ஸ் போர்டு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மெய்ஞ்ஞானபுரம்.	171	,,	10.00
11.	ஜே.ஆர்.கே. மஹாலெட்சுமி, சௌராட்டிரா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை-9.	170	ஆறுதல் பரிசு	10.00
12.	வி. சுகுணா, S.R.N.V. மேல்நிலைப் பள்ளி, இலக்குமி நாயக்கன் பாளையம்.	170	,,	10.00
13.	எல். மாதேஸ்வரி, ஜ.கு.க. ரங்கம்மாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, குமாரபாளையம்,	170	,,	10.00

வ. எண்.	மாணவர் பெயர், பள்ளி முகவரி	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
14.	வி. ஜெயராணி, புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வடுகர் பேட்டை.	170	,,	10.00
15.	எஸ். விஜயலட்சுமி, கலியாண சுந்தரம் மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.	170	,,	10.00
16.	டி. கணேசன், கன்கார்டியா மேல்நிலைப் பள்ளி, ஆம்பூர்.	170	,,	10.00
17.	இரா. இரமேஷ் அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி.	170	,,	10.00

தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்.

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரை தேவரவர்கள், புகழ் பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில், தமிழில் சிறந்த புலமை பெற்ற வர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கம் வாயிலாக, தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப் பவர்களில் பலர் இக்கல்லூரியில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டித என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்,

பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் திருவுருவச்சிலை :

பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை நினைவு கூறும் வண்ணம், அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

தேர்வின் அமைப்பும் பயனும் :

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு, கடந்த 84 ஆண்டு களாக சிறப்புடன் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது. இத் தேர்வில் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம் முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு (Public Examination) முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி, மாணவர் களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு பெரும் வாய்ப்பளிக்கிறது.

சான்றிதழும், சிறப்புப் பரிசும் :

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்று உள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும், மேல் நிலைப்பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர் கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும்

அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கபரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பத்தாறு மாணவர்கள் ரொக்கப்பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசுபெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் தமிழ்ச் சங்க வெளியீடாகிய "செந்தமிழ்" டிசம்பர் 1985-ஆம் ஆண்டு இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும், பெருமையும் என்றும் உண்டு.

தேர்வுநாள், தேர்வுக்கட்டணம்:

	தேர்வு நாள்	தேர்வுக் கட்டணம்
பத்தாம் வகுப்பு	8-2-1986	ரூ. 4 - 25
பன்னிரண்டாம் வகுப்பு		
பொதுத்தமிழ்	22-2-1986	ரூ. 4 - 25
சிறப்புத்தமிழ்	24-2-1986	ரூ. 2 - 25

அன்பளிப்பு:

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினை சென்ற ஆண்டு முதல் தாள் ஒன்றிற்கு பின்வருமாறு மிக உயர்ந்த அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்தாம் வகுப்பு	ரூ.	1 - 00
பன்னிரண்டாம் வகுப்பு	ரூ.	1 - 00
,, சிறப்புத்தமிழ்	ரூ.	1 - 10

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

அன்பு வேண்டுகோள்:

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டிய அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம்.

உங்கள் பள்ளியில் இருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாக அறிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் அறிவிப்பு கிடைத்தவுடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பெயர்ப் பதிவுப்பட்டியல் (2) வரவு செலவுப்பட்டியல் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர் பட்டியல் (4) கால அட்டவனை, தேர்வுக் கட்டண விபரம் தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்வாண்டு தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லையென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அரசு ஆணை R.Dis 166528/65 Dated 22-12-65 என்ற ஆணையின் (G.O.) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தமிழ் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தேர்வுநாள், கட்டண விபரம் :

வகுப்பு	தேர்வுக்கட்டணம்	தேர்வுநாள்	தேர்வு நேரம்
பத்தாம் வகுப்பு	ரூ. 4—25	8-2-1986 முதல் தாள்	10 - 12.30
		இரண்டாம் தாள்	2 - 4.30
மேல்நிலைப்பள்ளி இறுதியாண்டு பொதுத்தமிழ்	ரூ. 4—25	22 - 2 - 1986 முதல் தாள்	10 - 1
		இரண்டாம் தாள்	2 - 5
சிறப்புத்தமிழ்	ரூ. 2—25	24 - 2 - 1986	10 - 1

கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதி நாள் 20 - 1 - 1986

தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக்கொள்ள வேண்டிய செலவுத் தொகை விபரம்

10 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மொத்தத் தேர்வுக்கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித்தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 10 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் செலவுத் தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத்தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செல-விற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செலவானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்

கிறோம். மாணவர் பெயர்ப்பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல் வரவு செலவு பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்பவேண்டும்.

கூடுமான வரையில் தேர்வுக் கட்டணத்தை வரைவோலை (Draft) அல்லது காசோலை (Cheque) மூலம் அனுப்பவும். வரைவோலையினை எந்த வங்கியில் வேண்டுமானாலும் பெற்று அனுப்பலாம்.

தேர்வுக் கட்டணமும், தேர்வு பற்றிய குறிப்புகளும் அனுப்ப வேண்டிய முகவரி:-

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

சேதுபதி மகாராணி
த. இந்திராதேவி
தலைவர்

தங்களன்புள்ள
என். எஸ் முத்துமலைச்சாமி
செயலாளர்.

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Shakespeare & Ilango as Tragedians — K. Chellappan ரூ. 65 / —
2. கணிப்பொறி ஒருங்கும் பேசிக் மொழியும் — கா. செ. செல்லமுத்து நூலகப்பதிப்பு ரூ. 65 / — மாணவர் பதிப்பு ரூ. 35 / —
3. தமிழில் காப்பியக் கொள்கை — முனைவர் து. சீனிச்சாமி ரூ. 79 / —
4. சிலப்பதிகாரம் — பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாத ஐயர் ரூ. 125 /
5. புதிய இராகங்கள் — து. ஆ. தனபாண்டியன் ரூ. 150 /
6. குறுந்தொகை (மூலமும் உரையும்) — பதிப்பாசிரியர் சண்முகம்பிள்ளை ரூ. 140 / -
7. The Catalogue of Palm Leaf Manuscripts in the Tamil University — K. C. Chellamuthu, T. Padmanaban & P. V. Nagarajan ரூ. 55 / —
8. நாடகக்கலை — தமிழாக்கம் : மு. இராமசுவாமி ரூ. 65 / —
9. போகர் வைத்தியம் 700 — சே. பிரேமா & ப. வெ. நாகராசன் ரூ. 112 / —
10. பொறுப்பு — தமிழாக்கம் : இரா. சுப்பராயலு ரூ. 25 / —
11. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — செய்யுளியல் — இளம்பூரணர் உரையுடன் ரூ. 145 / —

மேற்கண்ட நூல்களை நேரில் / தபால் வழி பெறுவோருக் 30 % கழிவு அளிக்கப்படும்.

மாணவர் பதிப்பில் நூல்களைப் பெறுவோருக்கு 25 ; கழிவு அளிக்கப்படும்.

பேராசிரியர், ஆய்வு மாணவர்க்கு 40% கழிவு உண்டு. அஞ்சல் செலவு தனி.

தங்கள் தேவைக்குப் "பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 613 001, தமிழ்நாடு" என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.